பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணை
வெளி நாடு 1½ அணை.



வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[விளம்பரதிட்டி]

ஆசிரியர்
எ. கோ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விசேதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ வரு ஆவணி மீ 19 உ (4—9—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 19.

இனம்! இனம்!! இனம்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட, கருப்பு, செம்பு, ஸ்ரப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான ஒசிகரத்தோற்ற முள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று யவரு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும் உங்கள் ஜாதக பலனாவது கடிதம் எழுதும் தேதியாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ல் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மென்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு கேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதரஸ் தென்னிந்தியா மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதரஸ்.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x/40 இஞ்சி அகலமுள்ளது
நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பா கிங் தபால்செலவு இனம் விலை ரூ. 6—8—0

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

பாலாம்பிகை டிரேட் மார்க்

திப்பழனியில் அநேக ஏற்காட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும்பெற்று நீராதென கைவிடப்பட்டவியாதி களை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.

முதல் நெம்பர் தங்க பற்பம்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பல்வித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அநுகூலின்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதறகு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய் 36—0—0.
இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை 20—0—0 } [தபால் சார்ஜ் பிரத்தியோகம்]
மேற்படி 25-நாள் விலை 10—0—0 }
அனுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ. 10—0—0

அசல் வெள்ளி பற்பம்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி-பஸ்பம் ஏற்பட்ட அஜீர்தி வெட்டை ரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், கினுக்கிரும் பல், தேமல் விழுதல் வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், நிரேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கி யிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும் நிரேகத்திற்கு நல்ல பலத்தையும் சாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது இதை மதனகாமேஸ்வரிலேகியஅனு பானத்தில் சாப்பிடவேண்டும். ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய் 15—8—0 } தபால் சார்ஜ்
½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம விலை 7—8—0 } பிரத்தியேகம்
மதன காமேஸ்வரி லேகியம் 1-சேர் டின் ரூ ... ... விலை 8—0—0 }

நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி காரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் தீற்றுப் போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனே விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினல் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினல் ஏற்படும் சல்ல தோஷாதிகளையும் நிவர்த்திசெய்து கல மேனியை உண்டுபண்ணி சந் தோஷத்தில் வைத்து வளர்த்தும் அற்புதப்பாடல் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்]விலை ரூ.16-0

தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், சுவாசம், ஈளை, தோலை கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 7—0—0 }
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 5—0—0 } [தபால் செலவு வேறு]
லேகியம் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயணம் 10-நாளைக்கு விலை ரூ. 3—8—0 }

நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுறை மருந்து. முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ, 10—0—0 }
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 6—0—0 } தபால் செலவு வேறு

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுள்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பஸ்மம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினலும் சுவாசத்தினலும் கஷ்டப்பட்டும், அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனுயிருக்கிறேன் எல். கல்யாணராமய்யர் ரிடயர்டு தாசில்தார் அண்டு சென்னிரி திவான்:—

அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இறங்குவதும், நிரேக அக்கினியும், சூல மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷ்டப்பட்டு இம் மலாய் நாட்டில அநேக மருந்து சாப்பிட்டும், ஊசி மூலியமாக நிரேகத்தில் மருந்து செலுத்தியும் சவுகரியப்படாமல் கஷ்டப்பட்டு இருக்கையில், சென்னையில் பிர சுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். எழையின் மீதில் இருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும் 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரசியிடையாகச் சேர்த்து காலை மாலை இருவேளையும் மேற்படி பற்பங்களுக்கு அனுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு, தங்களால் அனுப்பப்பட்ட சந்தனாதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன் எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம், மேற்படி சுவாமியடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு, குமுட்டல வாந்தி முதலியன இல்லை. ருசியுடன் கூடியது. பத்தியம் தவறினல் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதிஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு தோல் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக் கொடுப்பாராக! அ. ஆறுமுகம் நெ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய் நாடு.

சற்குரு மகாதேவஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் நிறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அனுபவ முதிர்ந்த சமத்துவம் வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சௌக்கியம் கொடுப்பவர், சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணலக்ஷணங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்தில் கஷ்டப்பட்டேன். வியாதியின் குறி தென் படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன். நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் போல் வந்த சுவாமிகளிடம் என்னைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சௌக்யம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது தேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது. நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில் வாழ இருக்கிறேன், கூடப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஜீர்வதிக்கப்பட வேண்டுமாக கடவுளை வணங்குவேன். (Sd.) K. V. வேங்கடேஸ்வர அய்யர்,
பழனி, 19-2-1925 ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யுமபோது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாக்குக்கு இன்றே எழுதவும்.

தந்தி விலாசம் "சற்குரு" பழனி

ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

சதானந்த மெடிகல் ஹால் பழனி, (தென்னிந்தியா)

மலாய் நாட்டது யெது ஏஜண்டு, M. E. காபூர் அவர்கள் டிரஸ்ஸர், 86 டேலுக் தோடங் ரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

நீல் சிலைக் கூட்டம்.

திரு. தண்டபாணி பிள்ளை சொற்பெருக்கு

பார்ப்பனர்களின் சூழ்ச்சி.

சென்னை ஆகஸ்டு 20—

இன்று காலை 6 மணிக்கு சென்னை எழும்பூர் அனுமந்தராயர் கோயில் தெருவில் நீல் சிலையைத் தகர்த்து சிறை சென்ற வீரர்களைப் பாராட்டுவதற்காகவும், நீல் சிலையைத் தகர்க்கவேண்டி மேற் கொண்ட காரியத்திற்கு யோசனை செய்யவும் ஒரு கூட்டம் நடந்தது. அதில் ஸ்ரீ த. ரா. கடராஜன் தலைமை வகித்தார். முதலில் ஒரு சிறுவன் சத்தியாக்கிரக விஷயமாய்ப் பேசியபின் சென்னைக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியான ஸ்ரீமான் குழந்தை பி.ஏ பி. எல். ஹைகோர்ட்வக்கில் பேசியதாவது:—

"தனவான்களின் நீல் சிலையைத் தகர்க்க வேண்டியது நமது முக்கிய கடமை. நீல் சிலையை நமது சென்னையில் வைத்திருப்பதே சென்னை வாசிகளுக்கு அவமானம். நீல்மகர் அக்கிரமம் செய்தவனென்று சரித்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. நான் அதை நம்புகிறேன். நான் அதை நம்புகிறேன். இன்னும் இதைப்போல் அக்கிரமம் செய்தவர்களின் சில நம்மை நகரில் அதிகம் இருக்கின்றது. அவைகளையும் கூட ஒன்றன் பின் ஒன்றாய் உடைத்தெறிய வேண்டும். அவைகளாவன:—மன்ரோ சிலை ஒன்று. இவனும் நம் நாட்டை அடிமைப்படுத்தி ஆங்கில ஆட்சியைப் ஸ்தாபித்தவன். மற்றொன்று பியூபெத்தில் இருக்கும் லார்ட் காண்வாலிஸ் சிலை. இவன் மைசூர் ராஜிய த்திலுள்ள ஹைதர், டிப்பு சுல்தான் முதலிய தலை முகமிய ராஜாக்களையெல்லாம் கொன்று இந்த ராஜாங்கத்தை ஸ்தாபித்தவன், ஆதலால் இவனுடையசிலையையும் தகர்த்தெறிய வேண்டும். இம் முயற்சியில் ஈடுபட்டு நான் சிறைக்குப் போகத் தயாராய் இலலாவிட்டாலும், இரவில் தீவிரமாக கல்லை உழைக்க நான்பின் வாங்கினவனும், இங்கே உள்ள வாலிபர்கள் அந்த வேலைகளைச் செய்ய முன் வந்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இன்னமும் ஊக்கமாக அவர்கள் வேலை செய்ய வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த இயக்கத்தை நம் சென்னை மாகாணத்தில் உள்ள தலைவர்களோ, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிகளோ, பத்திரிகைகளோ ஆதரிக்க முன்வரா விட்டாலும் நீங்கள் அதைரியப்படாமல் உங்கள் காரியத்தில் கண்ணுயிருந்து நீல் சிலையைத்தகர்த்து, வரப்போகும் காங்கிரசிற்கு ஒரு பெரிய மதிப்பைபுண்டு பண்ணி தேசிய கிளர்ச்சியில் தீவிரமாகட்ட வேண்டும். "ஹிந்து" "சுதேச மித்திரன்" "சுயராஜ்யா" பத்திரிகைகளும் தவிர நடுகமம் கொண்டு இந்த சத்தியாக்கிரக சம்பந்தமான சமாசாரங்களைப் பிரசுரித்து ஆதரித்து தலையங்கம் எழுதவில்லை. இந்த மீட்டிங்கிற்கும் நிருபர்களை அனுப்பவில்லை. சில தலைவர்களும் உங்களை ஆதரிக்காமல் எழுந்திருக்கிறார்கள். நான் மட்டும் அதிலிருந்து தப்புவதற்காக இங்கே வந்து பேசுவதாக நீங்கள் நினைக்கக் கூடாது. என்னுடைய நிலைமை அப்படியாகி விட்டது. நாளை முதல் நான் உங்கள் கூட்டத்திற்கு வா முடியா விட்டாலும் (காங்கிரஸ் கூட்டங்கள் தவிர) மிடிங்களுக்கு நீங்கள் வந்தால் உங்களை அங்கே பேசவிடும்படி சிபார்சு செய்கிறேன், இவ்வளவு தான் என்னாலான உதவி (தொண்டர்களாகிய உங்களுக்குச் செய்ய முடியும்) உங்கள் இயக்கத்தை ஆதரிக்கும் படி காங்கிரஸ் கமிட்டியிலும் சொல்லிப் பார்க்கிறேன். தலைவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் அதற்காக நான் என்ன செய்வது? இங்கிருப்பவர்களாவது பொருள் உதவியை இவ்வேலைக்கு தொண்டர்களுக்கு, அளிக்கும்படி வேண்டுகிறேன்.

நான் வக்கீல் வேலையில் கேஸ் நடக்கும் போது மாஜிஸ்ட்ரேட்டைப் பற்றி பேசினால் தண்டனை கிடைக்கும் (மெம்பரை அறிந்து நேற்றவரை உங்கள் கூட்டத்திற்கு வர பயந்து கொண்டிருந்தேன். தீர்ப்பு கூறப்பட்டபடியால் இன்று தைரியமாய் உங்கள் முன் வந்து மாஜிஸ்ட்ரேட்டைக் கண்டிக்கிறேன்.

ராவ்பகதூர் பி சமபக்த முதலியார் ஒரு டிராமாக்காரர். அவர் நாடகமாடுவதாகக் கனவு கண்டு விட்டார் போலிருக்கிறது பால் மணமாறாத இளங்குழந்தை 15 மாதமாகியும்வரவில் தண்டனை விதித்து விட்டார். இக்கொடுமையான தண்டனையை விதித்த முதலியார் தலைக்கிற்று இழிவைத்தேடி வைத்தது தாமும் மீள முடியாத பாவத்திற்கு ஆளாகி விட்டார். இம்மாதிரி நியாயாதிபதிகளுக்கு சுயராஜ்யம் வந்தால் ஒரு நிமிஷமும் தாமதமில்லாமல் சீட்டுக் கொடுக்கப்படும். அதிகாரிகளின் தயவால் தான் பிழைக்கமுடியும் என்ற கொள்கையுடன் உத்தியோகத்திலமர்ந்து நீதி செலுத்தும் பலரிடையிருந்து இக்கொடிய தண்டனையை விட வேறு நாம் எதை எதிர் பார்க்கமுடியும். நீங்கள் அதைரியப்படாமல் பின்னும் பின்னும் அதிக தொகையாகச் சிறைக்குச் செல்ல வேண்டும், ஆனால் நான் மட்டும் வாத்தியாராய் இல்லை என்பதை மற்றொரு முறையும் உங்களுக்குச் சொல்லி என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்," என்று பேசி முடித்தார் பின்னர் அக்கிராசனர் ஸ்ரீமான் என். தண்டபாணி பிள்ளையை பேசுமபடி வேண்டிக் கொண்டார். பெருத்த கரகோஷத்திடையே ஸ்ரீமான் பிள்ளை எழுந்து பேசியதின் சாராம்சமாவது:—

சகோதரர்களே! தொண்டர்களே!! நான் சொல்லப் போகும் விஷயமுங்கள் கொள்கைக்கும் செய்கைக்கும் விரோதமாயிருந்தாலும் கூட, என்னைப் போல 12 வருஷம் தேசத் தொண்டு செய்து 1 வருஷம் சிறை சென்ற அனுபோக சாலிகளின் எச்சரிக்கையான முன் யோசனைகள் உங்களுக்கு மிக்க பயனையளிக்கு மாதலால் தயவு செய்து அமைதியாய் இருந்து கேட்கும் படி வேண்டிக் கொள்கின்றேன். உங்களுக்கு ஒருவர் உபதேசம் செய்ய முன் வந்தால் அவர் சொல்லுகிறபடி செய்து காட்டுபவராக இருக்க வேண்டும் பிறருக்குச் சொல்லுகிறபடி தாம் நடக்க யோக்கியதை யில்லாதவர்கள், கடந்து காட்ட திறமையும் சக்தியுமில்லாதவர்கள் உபதேசம் செய்யவும் முன் வரக் கூடாது.

எனக்கு முன்னால் பேசிய தலைவர் தேச பக்தியில் சமீபத்தில் வலிய இழுக்கப்பட்டு சிறைவாச அனுபோகம் சிறதுமில்லாத இளங் குழந்தையே யாவர். அவரை விட நான் தேசிய வாழ்வில் சிறிது வயதானவனபடியால் என் புத்திமதியை இளைஞர்களாகிய நீங்கள் சிறிது செவி கொடுத்து கேளுங்கள் தான் சிறைசெல்லத் தயாராய் இருந்து உங்களை நடத்த முன்வராத ஸ்ரீ குழந்தை உங்களைச் சிறைக்குச் செல்லத் தூண்டுவது பொறுப்புடைய செய்கையாகுமா என்பதை தீர யோசியுங்கள்.

சட்டம் படித்த ஒருவர் அதன் சகாயத்தினால் நேற்றுவரை வராமல் தப்பிதத்தைக் கொண்டு இன்றைக்கு ஆபத்தில்லாதபடியால் மாஜிஸ்ட் ரேட்டைத் திட்டுகிறேன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்பவரைப் பின பற்றி நீங்கள் உங்கள் சத்தியாக்கிரகத்தை நம்பி தொடர்ந்து நடத்தப்போகிறீர்களா? என் உபதேசம் என்ன வென்றால் "நான் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவும் இதை ஆதரிக்கவும், இதற்கு உதவி செய்பவும் எண்ணமில்லாதபடியால் உங்களையும் இதற்கு விரோதமான முறையில் தூண்டி விடுவதற்குத் தயாராயில்லை" என்பதுதான். இதனால் எனக்கு கற்போது தேசாபிமானமில்லை யென்றாவது, பயங்கொள்ளித்தனம் வந்து விட்டதென்றாவது நீங்கள் நினைக்க வேண்டாம். நீல் சிலையையும் நீல் சிலையைக் கட்டிய வெள்ளையர்களையும் அவர்களுடைய ஆட்சி அதிகார முறைமை பூராவையும் இந்த நாட்டை விட்டு அப்புறப்படுத்த முன் அணியில் நின்று வேலை செய்ய வேண்டுமென்று தேசம் விரும்பினால் அதற்குக் கீழ் படிந்து வேலை செய்வதில் நானே முதலானவன் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

நீங்கள் உங்கள் சத்தியாக்கிரகத்தை ஆர அமர காங்கிரஸ் தலைவர்கள், அல்லது வேறு தனிப்பட்ட பெரியோர்கள் முதலியவர்களிடம் யோசித்து அவர்களைக் கலந்து முடிவு செய்யாமலும், தேசிய ஸ்தாபனமாகிய காங்கிரசின் அநுமதி யில்லாமலும், காலதேச வர்த்தமானத்தைக் கவனியாமலும், தக்க நிதியும் பக்க பலமும் இல்லாமலும், உங்களுக்குள் கட்டுப்பாடான அமைப்பும் சரியான தலைவர்களும் இல்லாமலும், தேசத்திற்கு இக்காரியம் அவசியமா என்பதைப் பற்றி தீர்மானமும் ஆராய்ச்சியும் இல்லாமலும், நீங்கள் ஆத்திரப்பட்டு முன் யோசனையில்லாமல் இந்த சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்திருக்கக்கூடாது என்பதும், தவறி ஆரம்பத்துவிட்டாலும் இனியாவது உடனே அதை நிறுத்திவைத்துவிட்டு தலைவர்களுடைய யோசனைகளையும், காங்கிரஸ் அங்கீகாரத்தையும் உதவியையும் பெற்று பின்னடி நடத்தலா மென்பதும்

தான் என்னுடைய அபிப்பிராயம். வேலை யில்லா சோம்பேறிகளும், வயிற்றுச் சோற் றுக்கு வழியில்லா வாலிபர்களும் தொண் டர்களும் தேசிய வாழ்வில் ஈடுபட்டு அதைக் கெடுத்து வருகிறார்கள் என்று சிலரும், நீங் கள் செய்யும் வீரச்செயல்களுக்கு பத்திரி கையில் இடம் கொடுத்துப் பிரசுரித்து ஆத ரிக்க முன்வராமல் உள்ள சுயநல தேசிய 'ஹிந்து' 'மித்திரன்' பத்திரிகைகளும், நீங்கள் சிறை செல்வதைக் கணக்கிட்டுக் கொண்டு 25000 பேர் சிறை சென்றார்கள் எங்க ளுக்குத் தூட்டுகொடுங்கள் என்று கூலிவாங் கும் தாகர்களாய் உங்களை ஆதரிக்காமல் டெல்லி யிலும், சென்னையிலும் சட்ட சபையிலும், பராமுகமாய் இருக்கும் தலைவர்களும் நம் நாட்டில் தற்காலம் இருக்கும்போது, உங் களின் வீரச்செயல்களும், தியாகங்களும், சிறைவாச கஷ்ட நஷ்டங்களும் யாருக்குப் பயன்படும்? என்பதை சிறிது யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு சுயமரியாதையை மூலையில் தேடிக்கொண்டல்லவோ நீங்கள் ஊருக்குச் சுயமரியாதைக்காக உழைக்க வேண்டும். இப்பொழுது தேசியத்தலை வர்களும் பத்திரிகைகளும் சும்மாயிருப்பதின் மர்மத்தை நீங்கள் அறியமுடிகிறதா? இன் னோரன்ன சொல்லுகிறேன் கேளுங்கள். நீங் கள் தோல்வியுற்றால், எனக்கும் காங்கிரசுக் கும் இதில் சம்பந்தமில்லை. நாங்கள் இதை ஆதரிக்கவுமில்லை. கொழுப்பெடுத்த வாலி பர்களின் தனிப்பட்ட ஹோதாவில் நடந்த கிளர்ச்சி என்று உங்களோடு கண்டிக்கமுன் வந்து விடுவார்கள். தப்பித்தவறி சர்க்கா ரும் ஏமாந்து நீங்களும் ஜெயித்து விட்டால், நமது காங்கிரஸ் தொண்டர்கள் நீல் சிலையை தகர்த்து சுயமரியாதைக்கு ஸ்தாபித்து நா ட்டில் விசேஷ தேசபக்தியையும், பரபரப் பையும் உண்டுபண்ணிவிட்டதினால் (ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரின் முயற்சியினாலும் செலவினாலும், கூட்டப்படும்) அகில இந்திய தேசிய காங்கிரஸிற்கு வடநாட்டிலிருந்து லட்சக்கணக்கான டெலிகேட்டுகளும், விசி ட்டர்களும் சென்னைக்கு வருவார்களென்று தலைவர்களின் தலையங்கங்கள் தலைதெரியா மல் (முண்டமாய் நின்று) ஆட ஆரம்பித்து விடும். கேவலம் நாய்க்கு இருக்கிற அறிவு கூட நமக்கிருக்கக்கூடாதா என்றுதான் கே ட்கிறேன். நாய் கூட கல்லெங்கவ்வாமல் எறி ந்தவனையே கண்டு கடிக்கிறது. நீங்கள் மட் டும் என் இதை உணராமல் வெறும்சிலையிடம் சண்டைகட்டப் போகிறீர்கள். பெரிசிலையை உங்கள் உணர்ச்சிக்கு விரோதமாக அவிழ் காட்டியவர் யார்? அதிகார வர்க்கத்தின ரல்லவா? ஆதலால் இந்த அதிகாரவர்க்க த்தினரால் ஸ்தாபிக்கப்பட்ட சிலையை நீங் கள் ஒரு புறம் தகர்க்கவும், இதே அதிகார வர்க்கத்தினரால் விசப்பட்ட மாய சட்ட சபை வலையில் உங்கள் தலைவர்களாய் சீனி வாசய்யங்கார், சத்திய மூர்த்தி, செங்கசாமி அய்யங்கார் முதலியோர் போய் ஒத்துழை த்து ஆதரித்து வருவதையும், அவர்களு டைய தலைவாசிய கவர்னரையும் வைசிரா யையும் கண்டு பேசி கைகுலுக்கி புன்னகை செ டிவருவதையும் வணிகுமபோது உங் கள் அறிவுமைக்கு யான் வருந்தவேண்டி யிருக்கிறது. உங்கள் இருவர்களுக்குமிடை யில் அதிகாரத்தைக் அசைப்பார்ற்று சும் மாநிருக்கிறது. இதற்கு சுயராஜ்யமண்ட லியும் தேசிப்போர்? இதில் எதாவது அர்த் தமிருக்கிறதா? நீங்கள் சத்யாக்கிரகத்தை உடனே நிறுத்திவிடுங்கள்.

சுயராஜ்யக்கக்ஷி சட்ட சபையின் அங்கத் தினர் மூலம் இம்மாதிரி சிலைகளை எடுக்க விரும்படி ஒரு சட்டமியற்றச்சொல்லுங்கள். அல்லது (மாஜிஸ்ட்ரேட்டை கிட்டாமல்) இ ம்மாதிரி சிலைகளை உடைப்பவர்களுக்கு வெ குமதி கொடுக்கப் படுமென்று சட்டத்தை நிறைவேற்றச் சொல்லுங்கள். இதற்கு சட்ட சபை இடங்கொடாவிடில் வெளியே வந்து விடும்படி உங்கள் உழைப்பாலும் சகாயத் தாலும் சென்ற சுயராஜ்யக்கக்ஷி மெம்பர் களை சட்டசபையை பகிஷ்கரித்து வெளி வரும்படி வற்புறுத்துங்கள். கேட்காவிட் டால் இவர்களை நிறுத்த சத்தியாக்கிரகம் செய்யுங்கள். இதை கவனியாமல், உங்களை எவ்விட்ட கவர்னர்கள் அதிகார வர்க்கத்திற் கு அடிபணிந்து ஒத்துழைக்கவும், நீல் சிலை யில் முட்டிக்கொள்ளவும் ஏற்பட்டுவிட்டது, இந்த சத்தியாக்கிரகம் பிராமணர்களின் சதிப்போலீசினையினாலும், சூழ்ச்சியினாலும் ஏற்படுத்தப் பட்டிருக்கிற தென்று நான் கேள்விப்படுகிறேன். சென்னையில் கூடப் போகும் காங்கிரசுக்கு ஸ்ரீனிவாசய்யங்கா ரின் ஊழல்களால் அதிக கூட்டமும் சிறப்பு மிராதென்பதை முன்னதாக அறிந்து, செ ன்னையில் ஒரு கிளர்ச்சியை மறைமுகமாக உண்டு பண்ணி ஒன்றுமறியாத வாலிபர்களை சிறைக்கனுப்பி காங்கிரஸ் காடகமாட ஒரு கூட்டத்தார் புறப்பட்டிருப்பதை நான் பல மாய்க் கண்டிக்கிறேன். நாகபுரி கொடி ப போராட்டத்தின்போது வந்த வாலண்டியர் களை பிராமணர்களாயிருந்தால் தேர்ந்தெடு இடந்தராது. நீ சத்தியாக்கிரகத்திற்குலையக் கில்லை என்று வீட்டிற்கனுப்பிவிட்டு பிராம ணரல்லாத வாலிண்டியர்கள் எப்படியிருந்த போதிலும் தகுதிபாதவர்கள் என்று யா ரையும் விடாமல் நாகபுரிக்கனுப்பி சிறைப் படுத்திப் பெயர் வாங்கிய ஸ்ரீ சி ராஜகோ பாலாச்சாரியாரை நான் இச்சமயத்தில் உங் களுக்கு ஞாபகப்படுத்தி எச்சரிக்கை செய் கிறேன். பிராமணரல்லாத வாலிபர்களே! சாகசிரகையாய் இருங்கள் பிறருடைய சுயநலத்திற்காக நீங்கள் போய் படுகுழி யில் விழவேண்டாம். ஜெயிலுக்குள்ளேயும் ஜாதிபேதம் உண்டு. திருட்டுப்பார்ப் பானுக்குத் தனியாக பிராமணர் சபையற் காரன். பிராமணரல்லாதாரில் மேலான ஜாதியில் நீங்கள் பிறந்து சைவமென்றுசொ ல்லிக்கொண்டாலும், உங்களோடும், ஆதிதிரா விடர்களையும், திருஸ்தவர்களையும், முகமதி யர்களையும் ஒரே இனமாகப்பாவித்து, பஞ்ச மர் உள்ளிட்ட யாரையும் சமையற்காரராக வைத்து சமையல் செய்த உங்களுக்குப் போடுகிறார்கள். இது நல்லதுதான் என்ப தென்னுடைய கொள்கை. என்றும், இ ந்த நன்மையை ஏன் பிராமணனும் அடை யக்கூடாது என்றுதான் கேட்கின்றோம். இச்சட்டத்தையும் சுயராஜ்யக்கட்சியார் எ ளதாய் நிறைவேற்ற முன்வரவில்லை. ஆத லால் ஜெயிலுக்குள்ளும் சாதி வேற்றுமை யிருக்கும வரை பிராமணரல்லாதார் அதை திருத்தாமல் சிறை செலலக்கூடாதென்ப தான் என்னுடைய முடிவானகோரிக்கை.

நமது நாட்டில் நம் கூடப்பிறந்த நம்மு டன் பழகிய சகோதரர்களான பிராமணர் கள் நீல் சிலையைவிட மிகவும் இழிவான சுய மரியாதையற்ற முறையில் சில ஏற்பாடுகள் செய்திருப்பதை நீங்கள் கவனிக்க முற்படா மல் எதிரிகளுடைய கோட்டையில் போய் அங்குள்ள குற்றங்களைக் கவனிக்க முன்வந்து விட்டீர்கள். கோயில் குளங்கள், சத்திரம் சாவடிகள், சுடுகாடுகள், மடங்கள் இவைக ளில் பிராமணனுக்குத் தனியிடமும், ஏனை யோருக்கு வேறிடமும், தாழ்ந்த ஜாதியார் கள் வரக்கூடாத இடமும் அமைக்கப்பட்டி ருப்பது நீல் சிலையைவிட நமக்கு அவமான மாய்த் தோன்றவில்லையா? நீல் சிலையாவது சிறை விடத்தில் பேசாமலிருக்கிறது. இந்த பிராமணர்கள் சென்ற இடமெல்லாம் சிறைந்து நம்மைச் சூத்திரர் என இழிவுபடு த்தி தனிப்படுத்தும் இழிவைக்கருதி நீங்கள் இந்தப் பிராமணர்கள் பேசுகிறார் நீலாகள் என்று உணரவில்லையா? ஒவ்வொரு காப்பி கிளப்புகளிலும், பலகாரக் கடைகளிலும், பேரு ண்டிச் சாலைகளிலும் 'பிராமணர்' என்றும் 'பிராமணர் அல்லாதவர்' என்றும் பிரித்து நம்மைக் கேவலத்திற் குள்ளாகி கட்டி வைத்திருக்கும் போர்டுகள் நீல் சிலையைவிட கொடுமையாக இருப்பதை நீங்கள் பார்க்க வில்லையா? இம்மாதிரி கிளப்புகளில் உள்ள போர்டுகளை உடைத்து, சமரசத்தை உண்டு பண்ணி, சுயமரியாதையை நம் சகோதர ர்களிடை ஸ்தாபிக்க முன்வராமல் நீல் சிலை யை உடைப்பது அறியாமை யென்றே சொல்லுவேன். முதலில் காப்பி கிளப்புக ளில் நீங்கள் சத்தியாக்கிரகம் செய்ய தயா ராய் இருங்கள். யாரும் தலையிடப் பகிஷ் கரிக்க முன்வராவிட்டால் ஏனை தலைமை யேற்று இவ்வியக்கத்தை நடத்தி அதன் பலனை அனுபவிக்கத் தயாராய் இருக்கி றேன். பெருத்த பிராமணரல்லாத சமூக மும் நமக்கு பக்கத் துணையாய் இருக்கும். பிராமணர்களிலும் யோக்கியர்கள் இம்மா திரி இயக்கத்திற்கு ஆதரவு கொடுப்பார்கள். ஆதலால உங்களுக்குக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றிருந்தால் இம்மாதிரி முறை யில் செய்யுங்கள். இல்லாவிட்டால் மரியாதை யுணர்ந்து வெளியூர்த் தொண்டர்களாகிய நீங் கள் ஊருக்குப் போங்கள். சிறைசென்ற தேசபக்தர்களின் தியாகத்தையும், தீரச் செயல்களையும் பாராட்டுவதுடன் இனிமேல் நீல்சிலை சத்தியாக்கிரகம் காங்கிரசால் ஆத ரிக்கப்படாவிட்டால் நிறுத்தப்படவேண்டு மென்றும், சத்தியாக்கிரக தொண்டர்க ளுக்கு எச்சரிக்கை செய்து எனது பிரசங்கத் தை முடித்துக் கொள்ளுகிறேன். பின்னர், பலர் பேசிய பின்னர் கூட்டம் கலைந்தது.

குறிப்பு:—ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை பேசிவரும்போது சிலர் ஜாதிச் சண்டையை இழுக்கவேண்டா மென்றும், தொண்டரிற சிலர் சத்தியாக்கிரகத்திற்கு விரோதமாய்ப் பேசவேண்டாமென்றும், வேறு சில பத்தி ரிகைகளையும், தலைவர்களையும் இழுக்கவேண் டாமென்றும சுகுரலிட்டு எழுந்து கலகம் செய்தனர். ஸ்ரீமான் பிள்ளைமட்டும் உறுதி யாக நின்று "நீங்கள் எவ்வளவு போ கல கம செய்தாலும் என னுடைய அபிப்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீமான் நாயக்கரின் உபந்யாசம்.

ஸ்ரீமான் நாயக்கர் குற்றாலத்திற்கு சென்றிருந்த காலையில் அங்குள்ள சில பிரமுகர்கள் ஒரு சிறு உபன்யாசம் செய்யும்படி கேட்டுக்கொண்டபோது குற்றாலத்தில் ஸ்ரீமான் திவான் ஷண்முகம் பிள்ளையவர்கள் அக்கிராசனத்திலும், தென்காசியில் ஸ்ரீமான் சொ முருகப்ப செட்டியார் அவர்கள் அக்கிராசனத்திலும் உபன்யாசங்கள் செய்தார். ஸ்ரீமான்களான காந்திமதிநாதம் பிள்ளை, அம்பாசமுத்திரம் தாலூக்கா போர்டு பிரசிடெண்டு எலஞ்சி ஸ்ரீவாமூர்த்திபிள்ளை, திருநெல்வேலி தாலூக்கா போர்டு பிரசிடெண்டு எட்டியாபுரம் திவான் ஷண்முகம் பிள்ளை, கடயம் சங்கராபர், திருநெல்வேலி சாவடிப் பிள்ளை கும்பகோணம் வெங்கட்டராம நாயுடு திருப்பூர் M. V. கந்தப்பணசெட்டியார் இன்னும் அநேக பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

திவான் ஷண்முகம் பிள்ளையவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி அம்பாசமுத்திரம் தாலூக்கா போர்டு பிரசிடெண்ட் காந்திமதிநாதம் பிள்ளை அவர்கள் பிரேரேபித்தார். ஸ்ரீமான் எலஞ்சி ஸ்ரீவாமூர்த்தியா பிள்ளை அவர்கள் ஆமோதித்தார். ஸ்ரீமான் ஷண்முகம் பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்து ஸ்ரீமான் நாயக்கரைப்பற்றிப் புகழ்வாழ்த்திபின் ஸ்ரீமான் நாயக்கர் 3 மணிநேரம் அரசியலைப்பற்றியும் மதஇயலைப் பற்றியும் சமூகமுன்னேற்றம் என்பதுபற்றியும் பேசினார்.

அதன் சுருக்கமாவது:—அரசியலின் பேரால் கொண்டுசெய்துவந்த ஒருவன் அரசியலை விலக்கிவிட்டு அதன்பேரில் குற்றம்சொல்லிக்கொண்டு சமூக முன்னேற்றமே பிரதானமானது எனபதாக இன்று உங்கள்முன் பேசவேண்டிய காரணம் என்ன என்பதைப் பற்றியும், மதசம்பந்தமாக தற்காலமுள்ள விஷயங்களையும் என் குற்றம் சொல்லுகிறேன் என்கிற விஷயத்தைப் பற்றியும், சமூக முன்னேற்றத்திற்கு உழைப்பதை அரசியலிலும் மத இயலிலும் உழைப்பது என்று ஏன் சொல்லுகிறேன் என்பதைப்பற்றியும் நீங்கள் பொறுமையோடு கவனிக்க வேண்டும். அரசியல் என்பதும் மத இயல் என்பதும் ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஏற்பட்டதே தவிர அரசியலுக்கும் மதத்துக்குமாக சமூகம் ஏற்பட்டதல்ல ஆகவே அரசியல் என்பதும் மதம் என்பதும் சமூக முன்னேற்றத்திற்கு அனுகூலமாயிருப்பதாயிருந்தால்மாத்திரம் அவற்றில் ஈடுபட்டு ஒரு மனிதன் உழைக்கவேண்டுமேயல்லாமல், மனிதனுக்கு ஒருவேளைவேண்டுமே என்கிற காரணத்திற்காக மீனை தம், சமூகத்திற்கும் நாட்டிற்கும் கேடு சூழ்வதான காரியங்களைக் கட்டிக்கொண்டு அழுது மக்களைப் பாழாக்கக்கூடாது. முக்கியமாக மனித சமூகத்தின் நன்மையை உத்தேசித்துத்தான் நாட்டின் நிலைமையைக் கவனிக்கவேண்டியதே அல்லாமல் வேறு காரியத்திற்காக அல்ல. அன்றியும் தேசியம் (நேஷனலிசம்) என்பதுகூட ஒருநாட்டு மக்கள் சமுதாயத்தைப் பொறுத்ததுதான். ஆகவே சமுகத்தின் நன்மையைப் பார்க்கிற போது நமது மக்கள் இப்போது பேசிக்கொள்ளும் அரசியலையும் மத இயலையும் அடியோடு அழித்து புதுப்பிக்க வேண்டியதே தவிர அதை வைத்துக்கொண்டு எந்தவிதத்திலும் நாம் தேவா பழுதுபார்க்கவோ முடியாது (இரிபேரபுள்) என்பதே எனதபிப்பிராயம். முக்கியமாய் நம் தமிழ் நாட்டையோ தமிழ் மக்களையோ உத்தேசித்தால் இந்த இரண்டு காரியமும் செய்தாலொழிய கண்டிப்பாய் தமிழ் மக்களுக்கு விடுதலை என்பதே கிடையாது என்கிற சொல்லுவேன். எனவே, இதற்காக யாரும் மனம் விட்டுவிட்டுக் கூடாது. இந்த காரியமும் நம் மக்களுக்கு அவசியம்என்பதை மனதாரநம்பி அதற்கு எற்பட்டு விட்டால் காரியமே இது அழுத்தி கொண்டுவரக் கூடியதாகிவிடும். ஆனால் அப்படி ஏற்படுகிறகாலத்தில் அதற்கு அநேக எதிரிகள் ஏற்படகூடும் இதுபோல் வேறு அகாலமாகவோ இவ்விஷயத்தைக்கு எதிரிகள் ஏற்படாது அவை தானாகவே தொண்டே வந்திருக்கிறார்கள் அதற்கு எத்தனையோ சரித்திரமும் கலை யும் புராணமும் இருந்தாலும் நாம் நேருக்கு நேராய் பார்க்கக் கூடியதாய் ஏற்பட்டது நமது துரதிர்ஷ்டமாயினும் தெய்வாதீனமாயினும் ஒரு விதத்திலும் முன்னுக்கு வர மாட்டோம் என்பதை உணருங்கள்.

புதிதில் அரசியில் என்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லி விட்டு பிறகு மத இயலைப் பற்றி பேசுகிறேன்.

அரசியல் என்பது பித்தலாட்டமானது. அது மக்களுக்கு பொதுவாக எல்லோருக்குமாக ஏற்பட்டதல்ல. இப்போது இருந்தும் அரசியல் நிலைமைப் பார்த்து ஏதோ தான் சொல்லுவதாக நீங்கள் நினைத்துவிடக்கூடாது. நமது நாட்டில் அரசியல் என்பதாக ஒரு இயக்கம் ஆரம்பித்த காலத்திலேயே இதே கருத்துடனும் இதே கொள்கையுடனுமே தான் ஆரம்பிக்கப் பட்டதே தவிர வேறில்லை. நமது நாட்டில் நடைபெற்று வரும் அரசியில் இயக்கமானது நமதுநாடு பழைய பழக்கவழக்கங்களையும் நன்மையையும் ஆதாரமாய்க் கொண்டு ஆரம்பித்ததல்ல. இதன் மேல் நாடு முறையைப்பார்த்து ஆரம்பிக்கப்பட்டதே பாகும். பெருமபாலும் உலகத்தில் உள்ள அரசியல் என்பவைகளை, யார் ஆட்சி புரிவது, யார் அதிகாரம் செலுத்துவது, ஆட்சி புரிவதிலும் அதிகாரம் செலுத்துவதிலும் எற்படுமபயன்களை யார் அனுபவிப்பது, யார் ஆதிக்கம் பெறுவது என்பதைத்தான் கவலையாக கொண்டதே யொழிய, யார் பொது மக்களுக்கு பாமர மக்களுக்கு உபகாரம் செய்வது என்கிற கவலையே ஒரு சிறிதும் கொண்டதல்ல என்பதை தயவு செய்து கருத்தில் இருத்துங்கள். இம்மாதிரி ஆதிக்கமும பலனும் அடைய வேண்டியவர்கள் அதற்கு ஒரு ஆயுதமாக பொது ஜனங்களை மாற்றுவதற்காக பொது ஜனங்களுக்கு உபகாரம் செய்வதாகச் சொல்லுவது உண்டு. இதை பாமரமக்கள் நம்பி அடிமையாகவும் ஆகி. இதன் மேல் நாட்டு அரசியல் என்பது, நமது நாட்டு ஆங்கிலம் படித்தவர்கள் இதைப் பார்த்துத்தான் நமது நாட்டிலும் அதே மாதிரி அரசியல் இயக்கங்கள் ஆரம்பித்தார்கள்.

இதில் ஆரம்பித்தவர்கள் அனேகமாக வெற்றியும் பெறாதவர்கள். அவர்கள் வெற்றி பெற்றதின் பலனும் நாட்டு மக்களுக்கு பெரிய இடையூறும் ஆபத்தும் கொடுமையும் வளர்ந்து கொண்டே வந்தன இனியும் வரப் போகின்றன.

இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களையே நான் தயவாய் கேட்கிறேன். தயவு செய்து யாராவது பதில் சொல்லுங்கள். இந்த 42 வருஷகால அரசியல் இயக்கத்தால் அரசியல் கிளர்ச்சியில் நமது நாட்டிற்கு, நமது பாமர மக்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளிகளுக்கு, வாதகர்களுக்கு, கூலிக்காரர்களுக்கு, ஏழை மக்களுக்கு ஏதாவது ஒரு காதடிந்த ஊசியளவு பிரயோஜனம் ஏற்பட்டதாகச் சொல்லுங்கள் பார்க்கிறேன்.

இரண்டு பெரிய சீர் திருத்தங்கள் வந்தன, பெரிய பெரிய அதிகாரங்களும் சம்பளங்களும் நமக்கு கிடைத்தது என்று சொல்லுவீர்கள் இதைத் தவிர வேறு ஏதாவது சொல்லப் போகிறீர்களா? ஒன்று மில்லை இந்த உத்தியோகமும் சம்பளமும், யாருக்கு கிடைத்தது. இதனால் யாருக்கு என்ன லாபம். இது இல்லாத காலத்தைவிட இது ஏற்பட்ட காலத்தில் உண்டான நன்மை என்ன? வெறும ஏமாற்றமும் சிலரின் சுயநலசித்தியும் அல்லாமல் வேறு ஏதாவது ஏற்பட்டதாகச் சொல்லமுடியுமா? ஜனங்களுக்குள் கலகமுண்டாக்கப்பட்டதல்லாமல் வேறு ஏதாவது அவர்களுக்கு லாபமுண்டா? சர்க்காரை உத்தியோகங்கள் கேட்பதும், அது கிடைத்தவுடன் யார் அதை அடைவது என்பதற்காக சண்டை போட்டுக்கொள்வதும், அதற்காகக் கட்சி ஏற்படுத்துவதும், மக்களை பிரிப்பதும் இதன் தத்துவமாய்ப் போய்விட்டது. அரசியல் கட்சிகள் என்பதின் உத்தேசம் தான் என்ன? ஒரு

வரிடம் இருக்கும் உத்தியோகத்தை ஒருவன் பிடுங்கிக்கொள்ளச்செய்யும் தந்திரமே அல்லாமல் வேறு அதில் ஏதாவது நாணயமான எண்ணமுண்டா? பார்ப்பனரல்லாதார் கக்ஷியான ஜஸ்டிஸ் கக்ஷியின் பேரில் பார்ப்பனர்கள் குற்றம சொல்லிவந்ததின் கருத்து என்ன? அவர்களிடம் உள்ள அதிகாரத்தை பிடுங்கிக்கொள்வதற்கேயல்லாமல் வேறு என்ன? இன்றையதினம் பார்ப்பனர்களுக்கு இஷ்டமாயிருக்கும் தற்கால மந்திரிகள் பேரில் மற்றவர்கள் குற்றம் சொல்லும் கருத்து என்ன? இதை இப்படியே விட்டு விட்டால் பார்ப்பன ஆதிக்கம் பெருகிவிடும் என்கிற எண்ணமே யல்லாமல் வேறு என்ன. ஆகவே இப்போதைய மந்திரியாவது முன் இருந்த மந்திரிகளாவது உத்தியோகத்தில் செய்த குற்றமென்ன? அவரவர்கள் ஆதிக்கத்திற்குத்தக்கபடி உத்தியோகம் நடத்தும் போது மற்ற கக்ஷியாருக்கு விரோதமாய் இருப்பதும், அவர்கள் அதை ஒழிக்க கிளர்ச்சி செய்வதும் தவிர வேறு என்ன அங்கிருக்கிறது.....இதைத்தவிர வேறு வேலை தான் ஏதாவது அரசியல் காரருக்கு இருக்கிறதாகவோ இருக்கிறதாகவோ சொல்ல முடியுமா? இந்தலக்ஷணத்தில் இந்த மாதிரி இரண்டு சீர்திருத்தங்களையும் நடத்திக்காட்டி விட்டதாகவும் இனி மூன்றாவது சீர்திருத்தம் வேண்டுமென்றும் கேட்கப்படுவதை சர்க்காரும் விசாரணை செய்து பார்த்து கொடுக்கப்போவதாகவேஷம் போட்டு கடைசியாக மூன்றாவது சீர்திருத்தம் என்பதாக ஒன்றை வழங்கப்போகிறார்கள். அது என்ன என்று கேட்பீர்களானால் இதைவிட இன்னம் கொஞ்சம் பெரிய உத்தியோகங்கள். அதாவது இப்போது நிர்வாக சபை மெம்பர், மந்திரி, ஆகியவை இது வரை கொடுக்கப்பட்டது. இனி மாகாண கவர்னர் வேலை கொடுக்கப்படும். அப்படி கொடுப்பதால் வெள்ளைக்காருக்கு இப்போது இருந்து வரும் அதிகாரமும் உத்தியோகமும் ஒரு சிறிதும் குறைந்து விடும என்பதாக நினைத்து விடாதீர்கள். அதை உத்தேசித்து இப்போது முதலே அஸ்திவாரம் போட்டுவரப்படுகிறது.

என்னவென்றால்:—

சென்னை மகாணத்தை பாஷைவாரி மாகாணமாக பிரிக்க வேண்டும் என்று நமது அரசெல்லார்கள் இப்போதே காங்கிரஸ் மூலம் தீர்மானம் செய்து விட்டார்கள்.

அதாவது, சென்னை மாகாணம் பாஷை வாரியாய்த்தெரிந்து 4 மாகாணமாகப் பிரிக்க வேண்டுமாம்.

தமிழ் மாகாணம், ஆந்திர மாகாணம், கேரள மாகாணம் என்பதாக மான்காய்ப் பிரித்தால் தமிழ மாகாணத்திற்கு நாலு கவர்னர்கள் வேண்டிவரும். லாட் கேஷதுக்கே தமிழ் நாடு என்பது இப்போது இருப்பதுபோலவே இருந்து விடும். மற்ற மூன்றில் ஆந்திராவை ஸ்ரீமான் சினிவாச சாஸ்திரி போன்ற வருக்கு அதாவது "மகாத்மாவை நெஞ்சில் பிடித்த போடி" என்ற யோசனை சொன்னவருக்கும், மற்ற இரண்டில் ஒன்றை மதராட்டர் சப்பாவன் போன்ற ஸ்வருக்கு என்ன பின்னையாய் இருப்பவருக்கும கொடுத்துவிட்டு, ஒன்றை இன்னம் யாராவது ஒரு வெள்ளைக்காருக்கும் கொடுத்து விடுவார்கள். பெயருக்கு இந்தியர்களுக்கு இரண்டு கவர்னர் வேலை கொடுத்ததாகவும் சரித்திரத்தில் எழுதியிடம் கிடைத்ததும் அரசியல் காரருக்கும், அரசாங்கத்தாரோடு சண்டை போட்டு கிளர்ச்சி செய்து கவர்னர் உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டோம் என்று சொல்லி பாமர மக்களை இன்னமும் ஏமாற்றவும் இடம் ஏற்படலாம். இவை ஆதாரமாகக் கொண்டு இன்னமும் சில உத்தியோகமும் ஏற்படலாம். ஆனால் இவைகளினால் நமது நாட்டுக்கு என்ன லாபம்? பாமர மக்களுக்கு என்ன லாபம்? வரி செலுத்துவோர்களுக்கு என்ன லாபம்? ஏழைகளுக்கு என்ன லாபம் என்பதை கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். இந்த அதிக சம்பளம் உள்ள உத்தியோகங்கள் ஏற்படுத்தப் பட்டதற்கு ஏற்படும் செலவுக்கு யார்தலையில்கை வைக்க வேண்டிவரும் என்பதை சற்று கவனித்துப் பாருங்கள். இந்தியர்களுக்கு உத்தியோகமும், பெருத்த சம்பளமும், கொடுப்பதன் மூலமாய் வெள்ளைக்காரர் அனுபவிக்கும் உத்தியோகமும், சம்பளமும் குறைபடுதலாயிருந்தால் ஒரு விதத்திலாவது நமக்கு அது லாபம் என்று சொல்லலாம். அப்படியில்லாமல் எவ்வளவு சீர்திருத்தம் வந்தாலும் வெள்ளைக்காரர் அனுபவிக்கும் உத்தியோகம், சம்பளம் முதலியவைகள் குறையாமல், மேலும் அவர்களுக்கு அதிகமும் ஆகிக்கொண்டு, அதை அனுமதிப்பதற்கு லஞ்சம் கொடுப்பதுபோல் நமக்கும் சில உத்தியோகங்களைக் கொடுத்து, அந்த செலவுக்கு நமது குடியானவர்கள், வியாபாரிகள், பாமர மக்கள் முதலியவர்கள் தலையில் வரிப்பளுவை அதிகப்படுத்தி வருவதில் என்ன நயமை இருக்கிறது இவ்வளவு தூண்பத்தோடு போவதல்லாமல் இந்த உத்தியோகத்தை நம்மில் யார் அனுபவிப்பதுஎன்பதில்'எச்சில் இலைக்கு நாய்கள் சண்டை போட்டுக்கொள்வது' போல்; நமக்குள் ஒருவருக்கொருவர் கட்சி ஜாதிப் பிளவு, மதப் பிளவு, கிராமப்பிளவு, குடும்பப்பிளவு சகோதரப்பிளவு முதலிய ஒற்றுமைக் குறைவுகள் எவ்வளவென்பதையும் கவனித்துப்பாருங்கள், இதோடு தேர்தல் சுதந்திரம் என்பதாக நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தைப் போல் யோசமான காரியம வேறு-ஒன்று இருப்பதாகவே சொல்ல முடிய வில்லை. ஓட்டர்கள் அதிகமாஞ்சாளை பொழிய ஓட்டுகளை எப்படி உபயோகிப்பது என்கிற அறிவு 100க்கு 5 ஓட்டர்களுக்கு கூட கற்பிக்கப்படவே இல்லை. ஆராய்ச்சி இல்லாமலே ஓட்செய்யக் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு மணிதன் ராணுவகுலவு கற்பதற்கு முதல் பள்ளிகூடம் ஓட்டாவதாய் இருக்கிறது. 4 அணு 2 அணுவுக்கு கள்ளு சாப்பிடும் ஓட்டுகள் மீது கூறப்படுகிறதை நினைத்து வருகிறேன். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு என்ற பணம் செலவு செய்வதைப் பொருத்தமும், பொய்ப் பித்தலாட்டம் சொல்வதற்கு சக்தி இருப்பதைப் பொருத்தும் முடிவாகிறதே தவிர மனிதனின் யோக்கியதையையோ, பரோபகார குணத்தைப் பொருத்தோ ஏற்படுகிறதா என்பதை யோசித்துப் பாருங்கள். 1000, 10000 50000 என்பதாக செலவு செய்து ஓட்டர்களுக்கு லஞ்சம் கொடுத்து சட்ட சபை முதலிய ஸ்தானங்கள் பெறுகிறவன் யோக்கியனாயிருப்பானா? இருக்கமுடியுமா? ஆகவே இம்மாதிரி ஆபாசங்களும், அயோக்கியத்தனங்களும், தேசத்துக்கு துரோகம் செய்து பாமர மக்களையும் வஞ்சித்து பாழ்படுத்தும் பலனை அரசியல் பலன் என்று எந்த மூடனாவது ஒத்துக்கொள்ள முடியுமா? என்பதை தயவு செய்து யோசியுங்கள். நான் தேசத்துரோகியல்ல. நானும் தேசத்துக்காக என்று கொஞ்சமாவது உழைத்தவன். அதற்குள் புகுந்து அதன் வண்டவாளங்களை தெரிந்து வந்து உங்களிடம் சொல்லுகிறேனே யல்லாமல் சர்க்காருக்கு உள்ளாள் என்று நினைக்காதீர்கள். நான் போகிற விடமெல்லாம் போலீஸ்காரன் என்னைத் தொடர்ந்து கொண்டுதான் வருகிறான். வீணாய் அரசியல் அரசியல் என்று கருதி நாட்டையும், ஏழைமக்களையும் படுகுழியில் வீழ்த்தாதீர்கள் என்றுசொல்லி விட்டு மதப் புரட்டைப்பற்றிச் சில வார்த்தை சொல்லுகிறேன். (தொடரும்)

மதிப்புரை.

காதற் கடிதங்கள் :—என்னும் புத்தகமொன்று :எமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது காரைக்குடி "ஊழியன்" கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. இதலடங்கிய விஷயங்கள். நாயகன் நாயகிக்கும், தாயன் நாயகனுக்கும் எழுதும் கடித ரூபங்களில் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன.

இக்கடிதங்கள் காடகமேடையிலும், ரயிலடியிலும், வீலமாதர் வீதியிலும் எழுந்து நீர்க்குமிழிபோல் அழிந்து போகக்கூடிய காமக்கடிதங்களல்ல. உண்மையான காதற் கடிதங்கள். தெய்வீகத்தன்மையான காதற் கடிதங்கள். கவித்தன்மைவாய்ந்த காதற் கடிதங்கள். காலதேச வர்த்தமானங்களால் பாதிக்கப்படாத காதற் கடிதங்கள்.

பெண்களை, ப்ரஜா உற்பத்தியும், சமையலும் செய்யும் யந்திரங்களாகப் பாவிக்கும் ஆடவர்களையும், புருஷர்களை இவ்யந்திரவோட்டிகளாகப் பாவிக்கும் பெண்களையும் இக்கடிதங்கள் திருத்தி இருபாலாரிடையிலும, தேசபக்தி, சமத்வசகோதரத்வ ஞானம், ஒழுக்கம் ஆகியவைகளை வளர்க்கும்.

ஆகவே, இம்மாதிரி அல்களை ஆடவர், பெண்டிர், பாலர், விருதர், யாவரும் வாவழைத்துப் படித்துப் பயன் பெறின் அதுவே இக்காலாசிரியர் எதிர்பார்க்கும் கைம்மாறு. இதன் விலை ரூ. 0—12—0 வேண்டுவோர் "காரியஸ்தர் "ஊழியன்" கம்பெனி காரைக்குடி" என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். (ப-ர்.)

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை, சுயராஜ்யம் வியாபாரச்சோற்றுரிமை."

சுசீந்திரம் சத்தியாக்கிரகம்

திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் பொது ஜனங்கள் அதாவது ஈழவர் முதலானவர்களுக்கு சில பொதுத் தெருக்களில் நடக்கவிடாமல் கொடுமைப்படுத்தி வந்ததின் காரணமாக வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்ததும், அது ஒருவாறு அனுகூலமாய் முடிவடைந்ததும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதன் பிறகும் அதே ராஜ்ஜியத்தில் மற்றுமபல பொதுத் தெருக்களில் நடக்க உரிமை கொடுக்காமல் ஜனங்களை உபத்திரவப் படுத்துவதும், சிற்சில இடங்களில் அந்த சர்க்கார் அனுமதித்துவருவதும் நேயர்கள் அறிந்திருக்கலாம். ஆனால் சமீபகாலத்து அடுத்த சுசீந்திரம் என்னும் ஒரு ஊரிலும் இதேமாதிரி ஈழவர் முதலான ஜனங்களை நடக்கவிடாமல் கொடுமைப்படுத்திவந்ததை உத்தேசித்து அதில் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகளும் சில அதிகாரிகளுக்கு வேண்டியவர்களும், அந்த சத்தியாக்கிரகம் நடத்தினால் அவர்களை ஏமாற்றி, சித்திரத்தில் பெண்மோருக்குவழி நிறுத்திவிடப்படும் என்றும், சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிடும்படியும் சொல்லி வந்ததினால் சத்தியாக்கிரகத்தை நிலைநின்று நிறுத்தமுடியாமல் செய்துவிட்டார்கள். இம்மாதிரி சுமார் ஒன்றரை வருஷமாகியும் நாளதுவரை யாதொரு முடிவும் ஏற்படாமல் இருந்துவருவதோடு, இப்போது சர்க்கார் வேறு ரோட்டு போட்டுக் கொடுப்பதாகவும் அதற்கு ரூபா பத்தர்யிரம்வரை அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இம்மாதிரி செய்வதற்கு அந்த ஊர்க்காரர்களும் மற்றும் அந்த சத்தியாக்கிரகத்தில் சம்மந்தப் பட்டவர்களும் அனுமதிப்பார்களேயானால் அதை விட மானக்கேடான காரியம் வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆகலால் சத்தியாக்கிரகத் தலைவர்கள் ஊர் ஜனங்களுடனும், சுற்றுப்பக்கத்து பிரமுகர்களுடனும், தொண்டர்களுடனும் கலந்து, சர்க்காருக்கு ஒரு மாத வாய்தாகண்டு ஒரு இருதிக்கடிதத்தை அனுப்பிவிட்டு, அதற்குள் தேவையான பிரசாரம் செய்து தக்க ஆதரவுதேடிக்கொண்டு உடனே சத்தியாக்கிரகத்தை தொடங்கவேண்டுமென்று விரும்புகிறோம். தமிழ்நாட்டில் உற்சாகம் உள்ள பல தொண்டர்கள் பார்ப்பனர்களால் ஏமாற்றப்பட்டு வீண்காரியத்தில் பிரவேசித்து அனுபவப்பட்டு திரும்பி சென்று வருகிறார்கள் இப்படி ஒருகாரியம் ஆரம்பித்தால் பலர் இவ்விடமிருந்து கூட்டம் வந்தாலும் வருவார்கள். இதை தக்கபடி யோசிக்கவேணுமாய்க் கோருகிறோம்.

பிராமணீயம் ஒழிந்த திருமணம்.

நாளது அண்டுஆவணிமீ 16ம் உவியாழனன்றாகை பார்ப்பனரல்லாத வாலிபசங்க உபதலைவரும், தாலூகா போர்டு அங்கத்தினருமான உயர் திருவாளர் எம். கே. சுப்புசாமி அவர்களின் திருமணத்தை முன்னிட்டு பார்ப்பார் அல்லாத முன்னேற்றத்திற்குப், சுயமரியாதைக்கும் உழைத்தும் உழைத்துவரும் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' 'குடி அரசு' ஆகிய ஒவ்வொன்றுக்கும் 2ரூ பாய் கன்கொடை டி. பி. ஆறுமுகம் பிள்ளை வசம் அளிக்கப்பெற்றது. திருவாளர் டி. பி. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் கன்கொடையைப் பற்றியும், பரார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தைப்பற்றியும் அரியரை வளக்கினர். திரு. மை பார்ப்பனர் அல்லாதாராலேயே தமிழ்மேலேயே வேதம் சொல்லப்பட்டு சிறப்பாக மிறைவேறியது என்று திரு. காளியப்பன் அவர்கள் எழுதுகிறார்

கோட்டார் பார்ப்பனப் புரோகிதமொழிந்த கதர் திருமணம்.

டாக்டர் எம். ஈ. பெருமாள்நாயுடு அவர்கள் செலவிற்கும் ஆலப்பிழை டாகடர் கே. வெங்கிட்டராம நாயுடு அவர்கள் சகோதரர் குமார் டாக்டர் கே. ராமச்சந்திர நாயுடு L. M. S. அவர்களுக்கும் 1—9—27 தேதி கல்S. மணிக்கு சிகாட்டார் டாக்டர் எம். ஈ. நாயுடு அவர்கள் வீட்டில் பார்ப்பனப் புரோகித மன்னிலும் மணமக்கள் கதர் உடையுடனும் வெகு சிறப்பாய் திருமணம் நடந்தேறியது. வெளியூர்களிலிருந்து அநேக கனவான்களும், உள்ளூரிலிருந்து உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், ஜமீன்தார்கள் முதலிய கனவான்களும் தேசச் சேவகர்களும் ஏராளமாக வந்திருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு ஜே!

கல்கத்தா கார்ப்பரேஷனில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயமாய் இரண்டரை மணி நேரத்துக்கு அதிகமாய் விவாதம் நடந்தது. கடைசியில், முஸ்லீம்கள், பிற்போக்கானவகுப்பார், ஒடுக்கப்பட்டவகுப்பார், மற்றும் கிறுஸ்தவர்களுக்கெல்லாம் கார்ப்பரேஷன் உத்தியோகங்களில் நியாயமான உரிமையுள்ள பிரதிநிதித்துவம்கொடுக்கப்பட வேண்டுமென்றும், இதை வழக்கத்தில் கொண்டு வருவதற்காக ஒரு திட்டம் போடுமபடி பன்னிரண்டு அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஸ்பெஷல் கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் பிரேரேபணை செய்து வேற்றப்பட்டது. இதற்கு சாதகமாய் 42 பேரும், பாதகமாய் 8 பேரும் ஓட்டு கொடுத்தனர் தீர்மானம் நிறைவேறியது. ("திராவிடன்")

"திராவிடன்"

வேண்டுமா? வேண்டாமா?

சகோதரர்களே!

பார்ப்பன ஆட்சியாலும், பார்ப்பன சூழ்ச்சியாலும், பார்ப்பன மதத்தாலும், பார்ப்பனப்பத்திரிகைகளின் பிரசாரத்தாலும், நீங்கள் இழந்து கிடக்கும் சுயமரியாதையையும், சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் திரும்பவும் அடைய

வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமானால் அதற்கென்றே உங்கள் தொண்டர்களால், பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகி நடத்தப்பட்டு வரும் "திராவிடனை" வாங்கிப் படியுங்கள். "திராவிடன்" தன் போலி தேசியத்தையும் சுயராஜ்யப் பூட்டையும் தைரியமாய் வெளியாக்கி சுயமரியாதைக்கென்றே உழைப்பவன். எனவே, "திராவிட"னைநீக் கண்டிப்பாய் உங்களுக்கு சுதந்திரமோட்சமில்லை; இதை நம்புங்கள்.



குடி அரசு.

சனோடு, பிரபவ-வரு ஆவணி 19உ

கோயமுத்தூர்
தொழிலாளர் வேலை நிறுத்தம்.

கோயமுத்தூரில் தூலாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டதைப் பற்றி நாம் மிகவும் மன வருத்தமடைகிறோம். தொழிலாளர்கள் பால் கமக்குண்டான அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நிற்க, இம்மாதிரியான ஒரு சம்பவம் ஏற்பட்டதானது பார்ப்பனரல்லாத ஏழை மக்களினத்தாருக்கிஷ்டவசமென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. தொழிலாள சகோதரர்கள் தங்களது ஒழுங்காய் கடத்தித் தரத்தக்க ஒரு தலைவரை தங்களுக்குள் அடைய யோக்யதை யற்ற காரணத்தினாலேயே இம்மாதிரியான தாரிஷ்ட வசமான சம்பவம் ஏறபட நேரிட்டதென்பதே நமதபிப்பிராயம் அல்லாமலும் கோவை தொழிலாளர்களின் தலைவரான ஸ்ரீமான் என் எஸ் ராமசாமி அய்யங்காரவர்கள் தொழில்லாளர்களுக்கு தலைவராயிருந்து கடத்த எந்த விதத்தில் உரிமை உடையவர், அல்லது நியாயத்தை உடையவர் என்பது நமக்கு விளங்க வில்லை. கொழிலாளர்களைத்தவிர மற்ற யாரும் தொழிலாளருக்குத் தலைவராயிருக்கக் கூடாதென்று அநேக இடங்களில் நாம் எழுதியும் தொழிலாளர் கூட்டங்களில் பேசியும் வந்திருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அல்லாமலும் இம்மாதிரி வேலை நிறுத்தம் செய்வதைப் பற்றியும் நாம் பலமாக கண்டித்து எழுதியும் பேசியும் வந்திருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஸ்ரீமான் ராமசாமி அய்யங்கார் எந்த விதத்தில் என்ன மாதிரியான தொழிலாளராவார். அல்லாமலும் அவருக்கும் தொழிலாளர்களுக்கும் வித்தியாசத்தில் சம்மந்தமுண்டு அவர்களைத் தப்பான்னியம், பாமர மக்களை வஞ்சித்தும், ஏமாயக்குறைவினாலேயே காலத்தை கழிக்கவேண்டியதான வக்கீல் உத்தி யோகம் செய்பவர். அன்றியும் மக்களை சமமாய்க்கண்ணில் பார்க்காமல் 100-க்கு 99 பேர்களான தொழிலாளிகளையே அதாவது தன்னை சரீரத்தால் உழைத்துச் சாப்பிடும் கண்ணியமான தொழில் மக்களைத் தாழ்ந்த பிறவியென்றும், மக்களை ஏமாற்றி ஊரார் உழைப்பால் பிழைக்கும் தன்னைப் போல் முர்க்கர் உயர்ந்த பிறவியென்றும் எண்ணி அக்தப்படிக்கே நடந்துவருகிற சாதியைச் சேர்ந்தவர். அந்மாத்திர மல்லாமல் இப்போது அவர் செல்ல ஏற்பட்ட ஜெயிலிலேயும், அங்குள்ள ஆயிரக்கணக்கான சகோதரர்களிடத்தினத்து அதிகமான வேறு சௌகர்யமும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்றும், வேறு ஒருவன் அதாவது உயர்ந்த ஜாதியான் என்று சொல்லிக்கொள்ளுகிற தன் ஜாதிக்காரன் ஒருவனே சமையல் செய்து போடவேண்டுமென்றதுமான தனி உரிமை கொண்டாடுபவர். மற்றும் அவரது கைரியம், சுயமரியாதை, தாணயம் இவைகளைப் பற்றி நாம் எழுதிக் தெரிந்துக்கொள்ளவேண்டுமென்கிற அவசியமிலாமலேதமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாய்த் தெரியக்கூடும். அன்றியும், தொழிலாளர் வேலைநிறுத்தம்செய்து கஷ்டப்படுவதில் அவருக்குள்ள கவலையென்ன என்பதை, அவர் தன்னை ஜாமீனில் விடும்படி கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தைப் பார்த்தால் சுலபமாய் அறியலாம். அதாவது தன்னை சிறையில் வைத்திருப்பதால்தான் பிஸ் வாங்கிக்கொண்ட கேஸ்களுக்கு கெடுதி வந்துவிடுமென்றும், அதற்காகவேண்டி வெளியில் விடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தவிர, அவரை வைத்து செய்ததைப் பாராட்டுவதற்காக பாராட்டுக் கூட்டமும் இவரைபோன்ற பார்ப்பனர்களாலே முக்கியஸ்தர்களாக இருந்து நடத்தப்பட்டிருக்கிறது. இவர்களுக்குப் தொழிலாளர்களுக்குமுள்ள விஷயம் சமரசமாயிருக்கமுடியும் பார்ப்பனரல்லாதார்களுக்குள் காவது ஒருஇடத்தில் கொஞ்சம் செல்வாக்கிருக்குமானால் அந்தச் செல்வாக்கையொழித்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்த தொழிலாளர் கிளர்ச்சியென்றும் வரிசையுத்தமென்றும் கிளர்ச்சியென்றும், ரயில்வே பிரயாணிகள் கிளர்ச்சியென்றும், குழாய்த் தண்ணீர் குடிக்கிறவர்கள் கிளர்ச்சியென்றும், தெருவில் நடக்கிறவர்கள் கிளர்ச்சியென்றும், மற்றுமெதாவதொரு கிளர்ச்சியின் பெயரையோ சங்கத்தின் பெயரையோ சொல்லிக்கொண்டு அதில் தங்களைத் தலைவர்களாகவும், காரியதரிசிகளாகவும் தங்களுக்குத்தாங்களே தெரிந்தெடுத்துக்கொண்டு அதன் மூலம் பார்ப்பனரல்லாத பாமர மக்களையும், வாயில்லாப் பூச்சிகளையும், வசப்படுத்திகொண்டு ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் கன்மைக்காகப் பாடுபடுபவர்கள் யாராவதிருந்தால் அவர்களையும், அவர்களுக்கிருக்கும் செல்வாக்கை ஒழிக்கவும், இவர்களை ஏமி விட்டு அந்த ஸ்தானத்தில் தாங்கள் அமர்வதையே முக்கிய கருத்தாகக்கொண்டு இம்மாதிரி காரியங்கள் நடத்தி வரப்படுகிறது. இதற்கு உதாரணமாக பார்ப்பனரல்லாதார்களில் 100-க்கு 99 பேர்களால்போற்றப்பட்டும மரியாதை செய்யப்பட்டுமவந்த வருகிற பெரியாரான சர். தியாகராயர் குமாரவர்களின் வீட்டுக்கு இது போன்ற தொழிலாளர் கூட்டங்களை ஒருகாலத்தில் ஏவிவிட்டு அவரை அடிக்கச்செய்ததும், அவர்வீட்டுஜன்னல்கதவுகண்ணாடிகளை உடைக்கச் செய்ததும், அவரது அருமை மனைவியார் இந்தத் தொழிலாளர்களிடம் தனக்கு மன்னிப்பு பிச்சை கொடுக்கவேண்டுமென்று தனது முந்தானையைப் போட்டுக் கும்பிட்டுக் கெஞ்சினதும் யாரும் அதற்குள் மறந்திருக்க முடியாது. சென்ற மாதத்தில் அதே தொழிலாளர்கூட்ட நண்பரில் ஒருவர் முனிசிபல் ஸ்தானத்துக்கு நின்றபோது அவருக்கு எதிரிடையாய் அவர்களை எவிவிட்ட கூட்டத்தாரே வேலைசெய்து அவரைத் தோற்கடிக்கப் பார்த்ததும், ஜன்னலும் கதவும் உடைக்கக் கொடுத்து மாங்கல்யப் பிச்சை கேட்ட கூட்டத்தாரே அத்தொழிலாளர்களுக்கு உதவிசெய்ததும்யாவரும் அறிந்திருக்கக் கூடும். நிற்க,

ஸ்ரீமான்கி:எ. வெங்கட்டரமணய்யங்கார் என்கிறமற்றொருபார்ப்பனர்கோவைத்தொழிலாளர் விஷயத்தில் பிக்கபாக்கெட்காரபமூள்ளவர் போல சந்தடி சாக்கில் தலையை நீட்டிக்கொள்ளுகிறார். இவருக்கு தொழிலாளர் விஷயத்தில் எப்படி அனுதாப பிருக்கமுடியும். எந்தெந்த மில் தொழிலாளர்கள் இப்பொழுது வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்களோ அந்தந்த மில்களிலெல்லாம் ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காருக்கு பங்கு இருப்பதோடு தானும் சுலபத்தில் நிர்வாகஸ்தராகவும் இருக்கிறார். ஆகவே இவர் தொழிலாளரை விட உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொள்வதோடுமுகலாளி கூட்டத்திலும் சேர்ந்து கொண்டு, 100-க்கு வருஷம் 1-க்கு 30, 40, 50 வீதம்லாபமும் பெற்றுக் கொண்டு நிர்வாகத்தையும் நடத்திக் கொண்டுஇருக்கிற இவர் உண்மையில் எப்படித் தொழிலாளர்களிடம் அனுதாபம் காட்டமுடியும். இவருக்குத் தொழிலாளர்களிடம் உண்மையாகவே அனுதாபமிருக்குமானால், தான்கடந்து கொள்ளவேண்டியமாதிரி என்ன? தன்னுடன்சேர்ந்த முகலாளிகளிடம் போய், ஒன்று இத்தொழிலாளர்களுக்கு இன்னின்ன சௌகர்யம் செய்து கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் என்னுடைய டைரக்டர் ஸ்தானத்தைராஜினாமா செய்துவிடுகிறேன், என்று சொல்ல வேண்டும் அல்லது இம்மாதிரி ஏழைகளைக் கஷ்டப்படுத்தி சம்பாதித்த லாபம் எனக்கு வேண்டாம், என்னுடைய பணத்தைக் கொடுத்து விடுங்கள், என்று சொல்லவேண்டும். அப்படிக்கில்லாமல், முதலாளி கூட்டத்தில் சேர்ந்து கொண்டு தன்னுடைய பணத்துக்கு வருஷம் 1-க்கு 30, 40, 50, வீதம் லாபம் சம்பாதித்து மூட்டைகட்டிக் கொண்டு தொழிலாளர்களிடம் வந்து "நான் உங்களுக்காகப்பாடுபடுகிறேன், முதலாளிகள் செய்வது அக்கிரமம் சர்க்கார் செய்வது அக்கிரமம் என்றுபேசி" பாமரமக்களின் ஓட்டைப்பெறப் பார்ப்பதனால் தொழிலாளர்களுக்கு என்ன லாபம் வந்து விடும். இவர்களுடைய முயற்சிகள் எந்த விதத்தில் யோக்கியமான பலனைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.என்பதை நேயர்கள்யோசிக்கவேண்டும்,தவிர ஸ்ரீமான் ராமசாமி அய்யங்காருக்காகேர்ட்டில்பேசும்வக்கீலோ ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியாரென்னும்பெரியார். அவர் பிலீடராக இக்கக்கேசில் பேசவந்தால் அவரைப்பற்றி இங்கு ஒன்றும் சொல்லவரமாட்டோம். அப்படிக்கில்லாமல், மாட்டிக் கொண்டவர் அய்யங்கார் பிராமணராதலால் அவரை தப்பு

விக்கவிடவேண்டுமென்கிற ஆசையல்லாமல் வேறில்லை. ஆகவே இந்தக் கூட்டத்தார் இனிஷ்பமாய்ச் செய்யும் ஆர்ப்பாட்டத்தினாலருத்து என்னென்பதாகாம் யோசித்தால் விளங்காமல் போகாது. வரப்போகும் தேர்தல்களில் தாங்கள் எழை மக்களின் கண்பர்கள் என்றுகாட்டி, பாமர மக்களை எமாற்றி ஓட்டு பெறுவதற்கும், தங்களுக்கு கிடைக்காது என்று தெரிகிற சந்தர்ப்பங்களில் தங்களது அடிமைகளைக் கொண்டுவந்து அந்த ஸ்தானங்களில் வைக்கவுமேயல்லாமல் வேறு எந்தவிதமாகவும் தொழிலாளர்களிடம் காருண்யம் இருக்க நியாயமில்லையென்பது விளங்காமல் போகாது. எனவே இந்தக் கூட்டத்தார் இம்மாதிரியான சம்பவங்களின் மூலம் தங்களை விளம்பரப் படுத்திக் கொள்வதற்கும், அந்தவிளம்பரத்தின் செல்வாக்கைப் பார்ப்பன எல்லாதார்களுக்கு விரோதமாய் உபயோகிதுப் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்துவமே யல்லாப் பூச்சிகளான பதினாயிரக்கணக்கான தொழிலாளர்களை பட்டினிகிடக்குபடி கொடுமை செய்துவிட்டார்களென்பதை இந்தவிளர்ச்சியைப்பற்றின நமது முடிவான அபிப்பிராயம். அந்த தேர்தலுக்கு ஆசைப்பட்ட பார்ப்பனரல்லாத இரண்டொருவரும் தங்களுக்கு கிடைக்கவேண்டிய ஓட்டுகளை உத்தேசித்து இச்சந்தர்ப்பத்தில் தங்களுடைய பேர்களையும் கொடுத்திருக்கிறார்கள். இவைகளினால் தொழிலாளர் இயக்கம் என்பது எவ்வளவு புரட்டும் மோசடியுமானதென்பதும் "இதத்தலிவர்" களின் யோக்யதையும் எண்ணமும் எப்படிபட்டதென்பதும், முதலாளிமார்களுக்கோ சர்க்காருக்கோ தெரியாமல்போக இடமுண்டா? இந்தக் காரணங்களால்தான அநேகமாக முதலாளிமார்களும் கடினசித்தத்தோடிருக்கவும், சர்க்காரும் யோக்யப் பொறுப்பற்ற வழியில் இந்தவிளர்ச்சிகளை அடக்க முயற்சிப்பதும் நமக்கு அதிசயமல்ல வென்றே கொன்றுகிறது.

நிற்க, பிறவியிலேயே உயர்ந்தவன் என்றுசொல்லிக் கொள்ளும் பார்ப்பனீயத்தையும், அதன் ஆதிக்கத்தையும் வேரோடு அழிக்கவேண்டுமென்பது எவ்வளவு முக்கியமானதோ, அதுபோலவே பணமுடையவன் உயர்ந்தவன், என்கிற தத்துவத்தையும் பணக்கார ஆதிக்கத்தையும் அடியோடு அழிக்கவேண்டியது என்பதும் அவ்வளவு முக்கியமான தென்பதே நமதபிப்பிராயம். ஆனால், பிறவியின்காரணமாக ஒரு பிச்சைக்காரனும் அயோக்கியனும்கூட தன்னைப்பெரியவன் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை நம்மால் அழிக்கமுடியாமல் இருக்கும்போது, பெரும்பணத்தைத்தக்கொண்டு அப்பணத்தால் பலவழிகளிலும் செல்வாக்குப் பெற்றுக்கொண்டு அப்பணத்தை மக்களுக்குக் கொடுத்து வசப்படுத்திக் கொள்ளும சக்தியிருப்பவனை எப்படி அழிக்கமுடியும், அல்லாமலும், அதைவிட இதற்கென்ன அவசரம் என்றும் பார்க்கவேண்டியிருக்கிறதேயல்லாமல் வேறல்ல. தனிவும், பிறவியில் உயர்வு என்கிற கொடுமை ஒழிந்தவுடன் பணத்தால் உயர்வு என்கிற கொடுமையை ஒழிக்கும் வேலைதான் பொதுவாக ஏற்படவேண்டும் என்பதுதான் நமது அபிப்பிராயம். அதுதான் இயற்கையுமாகும். ஆகவே இந்த இரண்டு காரியமும் முடிந்த பிறகுதான் சர்க்காரின் கொடுமையும் ஆதிக்கமும் தானாகவே ஒழுந்துவிடும். முன் சொன்ன இரண்டையும் வைத்துக்கொண்டு சர்க்கார் ஆதிக்கத்தை ஒழிப்பது என்பது உயர்ந்த ஜாதியான் என்பவன் இன்னும் கொஞ்சம் உயர்வதற்கும், பணக்காரனென்பவன் இன்னும் கொஞ்சம பணக்காரனுவதற்கும் உபயோகப்படுவதோடு, உயர்ந்த ஜாதியான் என்பவன் ஜாதித்திமிரோடு பணத்திமிரும் அடையவும், பணக்காரனென்பவன் பணத்திமிரோடு ஜாதித்திமிரடையவும் ஏற்பட்டு விடும் உதாரணமாக உயர்ந்த ஜாதியார் என்பவர் பணக்காரர்களாகிவருவதும் பணக்காராயிருப்பவர் உயர்ந்த ஜாதிக்காரர்களாகிவருவதும் அதபவத்தில் பார்க்கலாம்.

முடிவாக, முதலாளிகளுக்கும் நாம் சொல்லுவதென்ன வென்றால், தொழிலாளர் கிளர்ச்சியென்கிற இம்மாதிரி கிளர்ச்சிகளெல்லாம பார்ப்பனர்கள் தங்களுடைய சுயநலத்திற்காக ஆரமபித்தார்களென்பது பெரும்பாலும் மறுக்கமுடியாத உண்மையென்று வைத்துக்கொண்டாலும், அந்தக் காரணத்தைவைத்துக் கொண்டு வாபில்லாப்பூச்சிகளான தொழிலாளர்களின் கண்மையைப்புறக்கணிப்பது கொடுமையும் மனிதத்தன்மையற்ற செய்கையுமாகும். தொழிலாளர்கள் தங்களுடைய வயிற்றுப்பசிக்காக எவ்வளவு கொடுமைக்கும உட்படுவதாயிருந்தாலும அதற்குக் காரணத்தை வைத்துக்கொண்டே அவர்களைக்கொடுமைப்படுத்துவது மிகவும் இழிவானதென்பதே மறுபடியும் சொல்லுகிறோம். தொழிலாளர் என்கிற ஒரு கூட்டமும், அவர்களுடைய உழைப்பும் இல்லாவிட்டால் முதலாளிகள் எப்படி புணம் சம்பாதிக்கக்கூடும்? இந்த சமயம் தொழிலாளிகளே முதலாளியாயிருப்பவர்கள் தோற்கடித்து விட்டாலும், அதன் பலனை எந்த விதத்திலும முதலாளிகள் அடைந்தான் தீரவேண்டும். வெறும் கோவில கட்டுவதிலும், குளங்கள் வெட்டுவதிலும், பார்ப்பனர்காலில் பணம் கொட்டுவதிலும், மோட்சமடைந்து விடலாம் என்பது வடிகட்டின முட்டாள் தனமே யாகும். மோட்சமென்பதாக ஒன்று இருக்கிறதென்று யாராவது நம்புவார்களேயானால், அவர்கள ஏழைகளைக்கொடுமைப் படுத்தாமலும் கூலிக்காரர்கள் வாயில் மண்ணைப் போடாமலும் இருப்பதுதான் அமமோட்சத்திற்கு வழியெனபதை உணரவேண்டும். அன்றியும், நமது நாட்டில் வெகு சீக்கிரத்தில் உண்மையான தொழிலாளர் கிளர்ச்சி ஏற்படப்போகிற தென்பதை முதலாளிமார்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும. அந்தக் கிளர்ச்சியை பார்ப்பனர்களாவது, சர்க்காரைக்கொண்டு முதலாளிமார்களாவது ஒருக்காலும் எமாற்ற முடியாது என்பதையும முதலாளிமார்களுக்கு அவர்களிடத்தில் நமக்குள்ள பற்றுதலினால் எச்சரிக்கை செய்கிறோம்.

மகாத்மா காந்தியும் பார்ப்பனப் பிரசாரமும்.

மகாத்மாகாந்தியும்வாணாசிரமமும் என்பதாக இரண்டொரு தலையங்கங்கள் எழுதிவருகிறதை நேயர்கள் படித்திருப்பார்கள். இப்பொழுது மகாத்மா காந்தியும் பார்ப்பனீயப்பிரசாரமும்என்பதபற்றி எழுதநேர்ந்ததற்கு மிகவும் வருத்தப்படுகிறோமாயினும் எழுதாமலிருப்பதற்கு முடியவில்லை. இதற்கு முன் எழுதிய தலையங்கத்தில் நாம் கண்டிக்க நேர்ந்தவிஷயமான து. மகாத்மா அவர்கள் வாணாசிரம தர்மம் என்கிற ஜாதிப் பிரிவுகள் உண்டு என்றும், அதுவும் மக்களுக்கு பிறவியிலேயே உண்டு என்றும், அவனவன் பிறவி ஜாதிக் கேற்ற தர்மத்தையே (தொழிலையே) செய்ய வேண்டுமென்றும், அந்தப்படி செய்யாமல் தவறுவானேயானால் அவன் தாழ்ந்த ஜாதியான் ஆய்விடுவானென்றும் மகாத்மா சொல்லியும் எழுதியும் வந்தவிஷயத்தைத்தான் நாம் தமிழ் நாட்டின் நிலையையும், காங்கிரசையும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும். அவர்களது உரிமையையும், சுயமரியாதையையும் உத்தேசித்து கண்டிக்க நேர்ந்தது. இப்பொழுது 'குலக்கல்வி' திட்டம் என்பதை கள்ளமனதோடு புனைதக்குழியும் தோண்டிற்று' என்கிறபழமொழிபோல பழையபுராணப்பிரசாரம்என்கிற பார்ப்பனப்பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டதைப் பார்க்க நமது மனம் பதறுகிறது. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் வேலையின் பயனாகவும் 'குடி அரசி'னுடையவும், மற்றும் சில தமிழ்ப்பத்திரிகையினுடையவும் வேலையின் பயனாகவும்பிடிவாதகாரர்களும் கொஞ்சம் கொஞ்சம் மூட நம்பிக்கைகளையும் புராணப் புரட்டுகளையும்உதறித்தள்ளி பகுத்தறிவை உபயோகிக்கலாமா என்கிற அளவுக்குவந்திருகிறார்கள். நமது நாட்டுப் பார்ப்பனர்களிலும் ஒரு சாரார் இவற்றிற்கு சம்மதம் கொடுப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லாமல, தாங்களும் குருட்டு நமபிக்கைகளிலிருந்தும், புராணப் புரட்டுகளிலிருந்தும், விலகவேண்டியது நாட்டின் முன்னேற்றத்தை உத்தேசித்து அவசியமானதென்று சிற்சிலர் பேசியும் வருகிறார்கள். சமீபத்தில், திருவாரூரில் கூடிய வைஷ்ணவ சித்தாந்த சபையென்கிற ஒரு பார்ப்பன ஆதிக்க சபையின் 10 வதுவருஷக்கூட்டதில், அக்கிராசனம் வகித்த ஒரு பார்ப்பனர் தமது முகவுரையில் "நமது பழய அனுவஷ்யமான குருட்டுப்பழக்க வழக்கங்களையும மூட நமபிக்கைகளையும் விட்டு விட வேண்டும, அப்படிச் செய்தால் தான் நம்முடைய மதம் நிலை பெற்றிருக்கும், அதன் மூலமாக இந்துக்களாகிய நாம் கடைத் தேறலாம்" என்பதாகப் பேசியிருக்கிறார்.

சமீபத்தில் பம்பாயிலுள்ள யாங்ஷாம்பு என்றஒருபிரபலசீனப்பெரிபார்இந்தியர்கள் விடுதலைபெறுமலிருப்பதற்குக்காரணம அவர்களுடையமூட நமபிக்கையும் அவர்களது மத சம்மந்தமான புராணக் கதைகளுமே காரணமென்றும், இந்திய சமூகத்துக்கு

இன்றியமையாத சாதனங்களென்று கருதப்படும் புராணங்களையும் கதைகளையும் பிறவற்றையும் ஓர் ஒழுங்குக்குள் கொண்டு சுயமரியாதை அடையுங்கள், அப்பொழுதுதான் விடுதலையடைய முடியும் என்றும் சொல்லியிருந்தோம். நாமும் இப்புராணப் புரட்டுகளையும் மூட நம்பிக்கைகளையும் ஒழித்து சுயமரியாதை அடைந்ததான் விடுதலை பெறவேண்டுமென்பதாக இவ்விரண்டு வருஷங்களாக சங்கிலித்தொடர் உழைத்து வருவதும் தேவர்கள் அறிந்திருக்கலாம். இடையில் திருவானைக்கா என்னும் ஒரு கல்வி சம்பந்தமான ஜனங்கள் விழிப்படையக்கூடிய சமயத்தில், நமது காட்டுப் பார்ப்பனர்கள் இவைகளுக்கு விரோதமாய் மறுபடியும் பார்ப்பனக் கதைகளான புராணப் பிரசங்கங்கள் செய்து மக்களுடைய சுயமரியாதையை முளையிலேயே கிள்ளி அழிக்க மகாத்மாவைக் கொண்டு கூட்டங்கூட்டி வைத்து பார்ப்பனப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். உதாரணமாக சாரீபத்தில் லேலாரில் வாலி பர்களுக்கு உபதேசம் செய்த ஒரு பிரசங்கத்திலே வாலிபர்களைப்பார்த்து "ஜீவகன் நிஷ்காருய ஸுத்சாரியர்களும் பெரியோர்களுடைய வேலை அவர்களுடைய உபதேசத்தை நிஷேவண்டுமே தவிர்ப்பிடமில் அவைகளுக்கு பணிக்கு கடம்பும் தன்மையை உங்களிடம் உண்டாகவேண்டுமென்று நான் விருபுகிறேன்" என்று பேசியிருக்கிறார். பரிசுத்தத் தன்மையுள்ள வாலிபர்களிடத்தில் போய் இம்மாதிரியாக அவர்களுக்கு உபதேசம் செய்தால் அவர்களுடைய பிற்காலவாழ்வு முடிவுமுடிந்தையில் அழுத்தப்பட்டுப் போகுமா அல்லவா என்பதை வாசகர்களே உணரவேண்டும். அன்றியும் வேலூரில் ஒரு பெண்கள் கூட்டத்தில் பிரசங்கம் செய்யும் போது ராமாயணத்தைக் கையை அவர்களுக்கு உபதேசித்திருக்கிறார். இவைகளை எல்லாம் மகாத்மா அவர்களிடம் உள்ள பக்தியினால் உண்மையென்று நம்பும் அவர்கள் தங்கள் குறுக்கை குட்டிகளுக்கும் இதே பாடத்தைப் போதிக்கவும், அதனால் சமுதாய முழுமை இழிநிலையடையும் என்பதையோ இல்லையோ இம்மாதிரிக் கதைகளை ஒரு நல்ல உதாரணத்துக்காக எடுத்துக் காட்டியாவது சொல்லிக் கொள்ளுமாயிருக்காலும், அதிலுள்ள தீங்கு, எந்த நல்லமைக்காக எடுத்துச் சொல்லப்படுகிறதோ அந்த நன்மையைவிட அபிவிருத்தி கற்பனையாயிருப்பதால், இதைப்பற்றி நாம் கண்டனம் எழுதுவதே தவிர வேறல்ல.

இதைப் படிக்கிறவர்களுக்குக் கூட ஒருவேளை நம்மீது வெறுப்பேற்பட்டாலும் ஏற்படலாம். அதாவது, இதென்ன! ராமாயணத்தைப்பற்றிக்கூட குற்றஞ்சொல்ல ஆரம்பித்துவிட்டது. வரவர நாம்பம் மோசமாய்ப் போய்விட்டதென்று எண்ணினாலும் எண்ணலாம். தமிழ் மக்கள் சுயமரியாதை அடையவேண்டுமானால் இவற்றையெல்லாம் குப்பையில் தள்ளினால் ஒழிய ஒரு வழியிலும் விமோசனம் கிடையாது. எதோ ஒரு காரியம் கருதிக்கொண்டு இருக்கிறதற்காகவோ, பக்திக்காகவோ, பயத்துக்காகவோ, இராமபாணத்தை உண்மையில் நடந்த விஷயமென்றும், அதிலுள்ள கொள்கையின்படி நடக்கவேண்டியதென்றும் ஒப்புக்கொள்வோமானால், அதன் மூலம் மற்ற விஷயங்கள் நம்மை எண்ணநிலைமைக்குக் கொண்டுவந்து விட்டு விடுகிறதென்பதை சற்று யோசித்துப்பார்த்து பிறகு ஒரு முடிவுக்கு வரும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். அதே ராமாயணத்தில் மற்றோரிடத்தில் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது ஒரு நாள் ஒரு வியோதி கப்பிரமணன் இறந்துபோன தன்னுடைய வாலிப குமாரனை தூக்கிச்சென்று வந்து ராமன் முன்பாகப்போட்டு ராமனைப்பார்த்து, உன்னுடைய நீதியான ஆட்சியில் என்னுடைய இளவயது மகன் எப்படி சாகக்கூடும், எனக்கு கேட்டதாவும் உடனே அரசனுடைய ராமன், தனதுடைய நாட்டில் இருக்கும் பிராமணக் குழந்தை சாதுமபடியாக அவ்வளவு பெரிய அக்கிரமம் என்ன நடந்து விட்டதென்று சற்றிப்பார்த்ததாகவும், அப்பொழுது தென்பாகத்தில் எதோ ஒரு நாட்டில் ஒரு சூத்திரன் கடவுளை நோக்கி தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்கையில், தன்னுடைய நீதியான ராஜ்யத்தில் சூத்திரன் கடவுளை வணங்கினதினால் பிராமணக் குழந்தை செத்துப் போய்விட்டதை, இக்க சூத்திரனைக் கொன்று விட்டால் பிராமணக் குழந்தை பிழைத்துக்கொள்ளும் எனபதாக முடிவு செய்து, யமன் ஏமாலிவட்டாக அந்த சூத்திரனை வெட்டி விட்டதாகவும் அதே வால்மீகி ராமாயணத்தில் உத்தரகாண்டத்தில் எழுதியிருக்கிறது. இவைகளையெல்லாம் நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமா என்று கான் ராமாயண பக்தர்களைக் கேட்கிறோம். இந்தக் கதை இந்த காட்டிலிருக்குமவரையிலும் தமிழ் மக்களுக்கு சுயமரியாதை ஏற்பட முடியுமா? ராமாஜ்யம, ராமராஜ்யம என்று பார்ப்பனர்கள் எழுதிவைத்திருப்பதை, மகாத்மாவும் அதைப படித்து விட்டு வந்து நமக்கு உபதேசம செய்வதும், நாம் இந்த ராஜாங்கம் போய் ராமாராஜ்யம் வந்தவிட்டால் மிகவும் நல்லது என்று நினைப்பதை. எவ்வளவு பைத்தியக்காரத் தனமானகாரியமென்பதையும் ராமராஜ்யம வந்தால் நமது கதி என்னுகும என்பதையும் யோசித்துப்பார்க்கவேண்டும். சூத்திரன் கடவுளை ஸ்தோத்திரம் செய்யக்கூடாதென்று ஒருகால எழுதப்பட்டிருந்தாலும், அதை உண்டாக்கினவர்கள் எவ்வளவு கொடுமைபுத்தியுடனும, கெட்ட எண்ணத்துடனும எழுதியிருக்கவேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

தவிரவும் தமிழ் நாட்டு மாணவர்களை பகவத்கீதையைப் படிக்க வேண்டுமென்கிறார். பாவதாசன் பாட்டன் பாவேந்தன். அதன் தமிழ் மொழிபெயர்ப்பான தமிழில் 1000 அபிப்பிராய பேதம். அன்றியும் அது பார்ப்பன மதத்தை போதிப்பதல்லாமல், தற்காலத்தில் நடக்க முடியாததும், நம்ப முடியாததும், விவகாரத்திற்கு இடமுள்ளதுமான விஷயங்களை 100-க்கு 90 அதில் புதைந்துகிடக்கின்றது. தமிழ் நாட்டில் ஏற்பட்ட தமிழ் பாஷையில் உண்டாக்கின தமிழர் மதத்தையே பிரதானமாகக் கொண்ட குறளை என் தமிழ்மக்களைப்படிக்கச் சொல்லக்கூடாது.

குறளைவிட கீதையில் என்ன அதிகமான நீதியும் சுயமரியாதையும் அடங்கி கிடக்கின்றதென்பது நமக்கு விளங்கவில்லை. ஆனால் மகாத்மா பார்ப்பனப் பிரசாரம் செய்கிறார் என்பதற்கு இதையும் ஒரு உதாரணமாகக் காட்டுகிறோம் நிற்க,

மகாத்மா காந்தியவர்கள் தமிழ் நாட்டில் கதர் பிரசாரம் பண்ணுவதைப்பற்றியாவது, தமிழ் மக்களுடைய பணம் லட்சக்கணக்காக வசூலித்துப் பார்ப்பனர்களிடம் கொடுத்துவிட்டுப் போவதைப் பற்றியாவது, முறையே நமக்கு கருத்தளவு ஆட்சேஷபணையும், கவலையும் இல்லை. ஆனால் கதர்பேரைச் சொல்லிக்கொண்டு மூடநம்பிக்கைகளையும் பார்ப்பன மதப் புராணங்களையும் பிரசாரம் பண்ணுவதைப் பற்றித்தான் நாம் கவலைப் படுகிறோம்.

அதாவது, இதுகாறும் நாம் செய்துவந்த வேலைகளை அடியோடு கவிழ்ப்பதற்காக, வேண்டுமென்றே பார்ப்பனர்கள் இந்தப் பிரசாரம் செய்கிறார்கள் என்பதாக முன்னமேயே நாம் குறிப்புக் காட்டியிருக்கிறோம். அது இப்பொழுது பிரத்யக்ஷமாகவே ஆரம்பமாய்விட்டது. தமிழ் மக்களுக்கு இது ஒரு மிகுந்த கடியான சமயமென்பதே நமதபிபிராயம். இவற்றிற்கு பரிகாரமாக மும்படியும் ஒரு மட்டம் தமிழ் நாட்டில் எதிர்ப்பிரசாரம் நடைபெறவேண்டியதாய்க்கானிருக்கும். எதற்கெடுத்தாலும் நமதுமக்கள் வேலை செய்யமுடியும். மகாத்மா அவர்களால் இம்மாதிரியான காரியங்கள் நடைபெறுமென்று நாம கனவிலும் நினைத்திருக்கமாட்டோம். இது ஒரு எதிர்பாராத ஆபத்தாய் வந்து சேர்ந்துவிட்டது.

தவிர இந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும் பிரமாதமாகப் பேசியிருக்கிறார். ஆனால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தைப்பற்றி ஒருவார்த்தைகூடப் பேசவுக்கு மகாத்மாவுக்கு மனம் வரவில்லை. பிராமணர் பிராமணரல்லாதார் விஷயத்தை மகாத்மா அவர்கள் அவ்வளவு அலக்ஷியமாகக் கருதும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறதென்று மாதிரிதான் நாம் சொல்லலாமேயொழிய நாட்டிவேறென்ன சொல்லக்கூடும்.

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஸ்ரீமான் நாயக்கர் குற்றாலத்திலிருந்து திருவனந்தபுரம் மார்க்கம கோட்டயர் ஸ்ரீமன் டாக்டர் எம். ஈ. பெருமாள் தாயுடு அவர்கள் குமாரத்தியின் திருமணத்திற்குப் போய்விட்டு மீட்புகல் ஈரோடு வந்து சேர்ந்தார். குற்றாலத்தில் கடைசிநாள் நீர் வீழ்ச்சியில் குளிக்கப் போகும் போது பாறை வழுக்கி விட்டது. நெடுங்கிடையாய் மேலே விழுவும். விழும் போது இடது முகத்தை ஊன்றியதில் அதுவும் வழுக்கி பாறைச்சந்தில் சிக்கிக்கொள்ளவும் அதனால் இடது கைத்தோள் சுருக்கியில் தூறுபலமாய் பட்டு சிறிது கோளாறு ஏற்பட்டு இருக்கிறது. அதனால் கை திருப்ப முடியாமல் இருக்கிறது. இரண்டு மூன்று நாளில் சென்னைக்குப் பிரயாணமாவார்.

திருவண்ணுமலை கோயில் வழக்கு.

"ஆதிதிராவிடர்களிடம் சாப்பிட்ட பிராமண கள் சாதிஇழக்காமல் இருக்கும்போது நான்மட்டும் ஏன் இழக்கவேண்டும்"

25-8-27-ல் கோயில்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. திரு. கண்ணப்பருக்காக வேலூர் முனிசிபல் சேர்மன் திரு. வி. எஸ். பத்மநாப முதலியார் ஆஜராஞர். எதிரிகளுக்கு உள்ளூர் வக்கீல்கள் திரு. விஜயராகவாச்சாரியாரும், இராமசாமி ஐயரும் ஆஜராஞர்கள். திரு. வி. என். சுப்புராவ் அவர்கள் வரவில்லை. கோர்ட்டு மண்டபம் முழுதும் மக்கள் நிரம்பி யிருந்தனர் "ஆதிதிராவிடர்களிடம் சாப்பிட்ட பிராமணர்கள் சாதி இழக்காமல் இருக்குமபோது நான் மட்டும் என் சாதி இழக்கவேண்டும்" என்று திரு. கண்ணப்பர் சொன்னபோது பார்ப்பனர்கள் முகம் வாடிற்று. பார்ப்பனரல்லாதார் முகங்கள் மலர்ந்தன. திரு. கண்ணப்பர் இராமசாமி ஐயரவர்களால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார் அதன் சுருக்கம்:—

நான் "திராவிடன்" "ஜஸ்டிஸ்" என்ற இரு பெரும் பத்திரிகைகட்கு ஆசிரியனுய் இருக்கிறபடியால் எனக்கு சமுதாயத்தில் உயர்ந்த உதவி இருக்கிறது. இவ்விரு பத்திரிகைகளும், பிராமணரல்லாதார் பத்திரிகைகளான படியாலும், அவைகள நிரம்ப சந்தாதாரர்கள் உடையனவாய் இருப்பதாலும் இப்பத்திரிகைகள், தலைசிறந்தவை கள். நான் பிராதில் 1, 2 எதிரிகள் ஓடினதைப் பார்த்ததாய்ச் சொல்லவில்லை. காரணம் பிராது சுருக்கமாய் இருத்தல் வேண்டும் என்றே. நான் கோபிலுக்குள் கடியாரம் இருக்கிறதோ இல்லையோ என்பதைப் பார்க்கவில்லை. கடியாரம் பார்க்க முடியாமல் போனதற்குப் பக்தியில் மூழ்கியிருந்தது காரணமோ, அன்றி வேறு எக்காரணமோ என்னால் சொல்லமுடியாது. வாதராஜ ரெட்டியார் கோவில் கிளார்க்குகளைக் கூப்பிட்டு என் கதவுகள் அடைக்கப்பட்டன என்று கேட்டார். அதற்கு அந்தக் கிளார்க்கு எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றார். நான் மானேஜர் எங்கே இருக்கிறார் என்று கேட்கவில்லை. இரண்டாவது எதிரியைத் தவிர வேறு எந்தக்குருக்களையும் பார்க்க வில்லை. உள்ளே பிரகாரத்தில் அடைபட்டுக்கிடந்தவர்கள் வெளியே போக முடியாது தவித்துக் கொண்டிருந்தார்கள். இக் கூட்டத்தில் பெண்களும் இருந்தார்கள். அர்த்த சாம பூசையாய் விட்டதா என்று நான் கேட்க வில்லை. அம்மன் கோயிலுக்கு முன்னால் ஒரு தாழ்வாரம் போன்ற மண்டபம் இருக்கின்றது. அம்மன் கோயில் சாமி கோயிலுக்கு வடக்கே இருக்கிறது. இதற்குக் கிழக்கே தாழ்வாரம் இருக்கின்றது. நான் இருந்ததற்கும் அந்த தாழ்வாரத்துக்கும் 15 அடி இருக்கும். ஒருவன் சாவியுடன் ஓடிக் கொண்டிருந்தான். அது அம்மன கோயில் சாவியாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் அங்கிருந்த பெண்கள் அம்மன் கோயிலைச் சாத்தி விட்டு சாவி எடுத்துக் கொண்டு போவதாய்ச் சொன்னர்கள். அவன் பிராமணனே பிராமணரல்லாதானே எனக்குத் தெரியாது. அவன் பருத்த தொந்தியுடையவனையும் இடுப்பில் மேல் வேஷ்டியைச் சுற்றிக் கொண்டவனையும் இருந்தான். அவன் பிராமணரல்லாத குருக்களாய் இருந்திருப்பானுயின், நான் மிக மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனெனில் பூசை கோயிலில் பிராமணரல்லாத குருக்கள் இருக்கவேண்டுமென்பதே யாகும். 1, 2 எதிரிகள் கெட்ட எண்ணத்துடன்தான் கதவைச் சாத்தினர்கள். சாமி சன்னிதியில் தெற்குக் கதவு 1-வது எதிரியாலும், வடக்குக் கதவு 2-வது எதிரியாலும் சாத்தப்பட்டன எல்லா சாட்சிகளும் என்னுடன் இருந்தபடியால் அவர்களைச் சாட்சியாய்ப் போட்டேன். திருவண்ணுமலை முனிசிபல் சேர்மன் கேஸ் சம்பந்தப்பட்ட வரையில் எனக்கு யாதொரு உதவியும் செய்ய முடியவில்லை. அவர் இச்சாட்சிகளை எனக்குச் சாட்சியம் சொல்லும்படியாய்ச் சொல்லவில்லை. அவர் வீட்டில் இப்பிராது எழுதப்படவில்லை. நான் ஹிந்துவோ அல்லையோ என்பது எதிரிகளுக்குத் தெரியுமோ தெரியாதோ என்பது எனக்குத் தெரியாது. சர்க்கில் இன்ஸ்பெக்டர் கோபால் பிள்ளை இங்கு வந்திருப்பவர்களெல்லாம் முதலியார்களும் நாயுடுகளும் என்றதால் அவர்கட்கு நான் 'இந்து' என்பது அப்பொழுது தெரிந்திருக்கவேண்டும்

பிறகு திரு. கண்ணப்பர் திரு. வி. எஸ். பத்மநாப முதலியாரால் விசாரிக்கப் பட்டார். அப் பொழுது அவர் சொல்லியதாவது:—

ஆதி திராவிடர்களுடன் சாப்பிட்டவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களெல்லாம் சாதியை இழக்கவில்லை கோயிலுக்குள் நுழையப்படாதென்று தடைசெய்யப்படவில்லை. திரு. சத்தியமூர்த்தி ஆதிதிராவிடர்களிடம் சாப்பிட்டிருக்கின்றார். அப்படியிருந்தும் இந்த எதிரிகள் அவரை இதே அண்ணுமலை கோயிலுக்குள் மேளதாளங்களுடன் அழைத்துச் சென்றார்கள். இன்னும் சர் பி. இராஜகோபாலாச்சாரியார் சர். சி. பி. இராமசாமி ஐயர் சர். டி. சதாசிவ ஐயர் முதலியவர்கள் ஆதிதிராவிடர்களால் செய்யப்பட்ட உணவு உண்டிருக்கின்றார்கள். இவர்கள் சாதி இழக்கவில்லை.எந்தக் கோயிலுக்குள்ளும் தடுக்கப் படவில்லை. மஹாத்மாகாந்தியவர்கள் ஆதி திராவிடப் பெண் ஒருத்தியை மகளாய் பாவித்து நடத்திக்கொண்டு வருகின்றார். இவர் சாதியைவிட்டுத் தள்ளப்படவில்லை. நான் மட்டுந்தான் தள்ளப் படவேண்டும்?

(இந்த விடைக்கு எதிரி வக்கீல்கள் ஆட்சேபனை செய்தார்கள் ஆனால் மாஜிஸ்டிரேட் ஆட்சேபனையை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்.)

மறுபடியும் கண்ணப்பர் எதிரிவக்கீல் விஜயராகவாச்சாரியாராலும், இராமசாமி ஐயராலும் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார் அப்பொழுது அவர் சொன்னதாவது:—

திரு. சத்தியமூர்த்தி முதலியோர் பிராயச்சித்தம் செய்துகொண்டது எனக்குத் தெரியாது. பிராயசித்தத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. பிராயச்சித்தம் என்பது பிராமணர்கள் வரும்படி பெறச்செய்யும் சூழ்ச்சி. சர். இராஜகோபாலாச்சாரியார் பிராயச்சித்தம் செய்து கொண்டாரா என்னமோ எனக்குத் தெரியாது. சர். டி. சதாசிவய்யர் சாஸ்திரியம், மகாபாஷ்யம் இல்லாத பிராமணர் மஹாத்மா காந்தி வருணாச்சிரம தருமத்தை ஆதரிக்கின்றார் ஆனால் அவர்கள் ஆதி திராவிடர்கள் நுழையாத கோயிலில் சாமி இல்லை என்று சுபத்தில் பெங்களூரில் பேசியிருக்கின்றார். மேலே சொன்ன பிராமணர்கள் வீட்டில் நடக்கும் கல்யாணம் சிரார்த்தம் முதலியவைகட்கு வைதிகப் பிராமணர்கள் போய் வயிறு புடைக்கச் சாப்பிட்டு தட்சணையும் வாங்கிக்கொண்டு வருகின்றார்கள். சர். எ. பி. இராமசாமி ஐயரவர்கள் வீட்டில் சமீபத்தில் நடந்த ஒரு விசேஷத்தில் வைதிகப் பிராமணர்கள் நன்றாய்க் கொழுத்தச் சாப்பிட்டு வெளியில் உட்கார்ந்திருப்பதை பார்த்தேன்.

இதுதியாக திரு. பத்மநாப முதலியாரால் விசாரிக்கப்பட்ட பொழுது மேற்படி பிராமணர்களுடன் எல்லாப்பிராமணர்களும் கொள்வினை கொடுப்பினை வைத்திருக்கின்றார்களென்றார்.

(திராவிடன்.)

முதல் ஆண்டு ஈரோடு வரிகொடுப்போர் மகாநாடு.

சேர்மன்மீது நம்பிக்கையில்லை.

ஈரோடு முனிசிபல் வரி செலுத்துவோரின் மகாநாடு 28-8-27ல் ஈரோடு ஈஸ்வரன் கோவில் வீதியில் ஸ்ரீமான் பி. வி. நாராயணசெட்டியார் சன்ஸ் அவர்களது பங்களாவில் ஸ்ரீமான் எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ. எல். டி. அவர்களின் தலைமையின்கீழ் கூடைபெற்றது.

மகாநாடு ஆரம்பிக்குமுன் வரவேற்புக்கமிட்டித் தலைவர் ஜனப் எம். கே. கே. அப்துல் ரஜாக் சாஹிப் அவர்களும் மகாநாட்டுத்தலைவரும் மோட்டாரில் பாண்டு வாத்தியங்களுடன் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சூழ ஊர்வலமாய் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் இரண்டு இடங்களில் புகைப்படம் எடுக்கப்பட்டது. மேகங்கள் கவிந்துகொண்டு கொஞ்சம் மழை சொரிந்தும் மகாநாடு கலையாது இனிது நடந்தது. வரி கொடுக்கும் வியாபாரிகள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள், மகாஜனங்கள் ஆயிரக்கணக்காக விஜயம் செய்திருந்தார்கள். கொட்டகை நிரம்பி, கொட்டகைக்கு வெளியிலும் மழைத்தூரலில் நனைந்துகொண்டு அமைதியாக நடவடிக்கைகளை கவனித்து வந்தார்கள்.

ஸ்ரீமான் கே. எல். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துச்சொல்லி தலைவரைப் பிரேரேபித்தார். அதை ஸ்ரீமான் ஆர். சதாசிவம் செட்டியாரவர்கள் ஆமோதிக்க தலைவர் ஆசனத்தமர, ஸ்ரீமான் சுப்பிரமணிய யோகி அவர்கள் கடவுள் வணக்கத்திருவருட்பாக்கள்பாட மகாநாடு சுமார் 4-மணிக்கு ஆரம்பமாயிற்று.

உபசாரணத்தலைவர் வரவேற்புச் சொற்பொழிவு நிகழ்த்தியபின் மகாநாட்டுத் தலைவர் தமது சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பிறகு, பலபிரமுகர்கள், தற்கால சேர்மன் சிங்கார வனத்திற்கென்றும், சார்போட்டுக்கென்றும், கோர்ட் வியவகாரத்திற்கென்றும், கவர்னரை பார்ப்பதற்கென்றும், தகாகவழியில் ஏராளமான முனிசிபல் பணத்தை செலவு செய்ததைக் கண்டித்தும், சிப்பந்திகளை நியாயமில்லாமல் தள்ளுவதையும், தமக்கு வோட்டு சேகரிக்க உபயோகித்துக்கொள்ளுவதையும், தமக்கு பாதமான வோட்டர்களிடமிருந்து வரியை ஏற்றுக் கொள்ளாமல் அவர்களை ஒட்டர் லிஸ்டிலிருந்து விலக்கி, தனக்கு சாதகமாக போக்யதையில்லாத வோட்டர்களைச் சேர்த்த சூழ்ச்சிகளைத் தாக்கியும் விமரிசையாக ஏராளமான உதாரணங்களைக்காட்டிப்பேசி ஈற்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றினர்கள்.

தீர்மானங்கள்:—

இந்த மகாநாடு ஈரோடு வரிசெலுத்து வோர்களுக்கு கற்கால மிருகத வரும் நகர பரிபாலனத் தலைவர் மீதநம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மிற் கண்ட முக்கிய காரணங்களைக் கொண்டு ஏகமனதாய் நிறைவேற் றுகிறது.

(1) ஏராளமான முனிசிபல் பணத்தை பல்வேறு வழிகளில் தகுதியான அனுமதி யின்றியும் அனுமதியை எதிர் பார்த்தும் செலவு செய்திருத்தலாலும்.

(2) முனிசிபல் சிப்பந்திகளில் அனே கமாய் நியாயமின்மை பய கலத்தைக் கருதி வேலையிலிருந்து நீக்கி அதனால் முனிசிபல் காரியங்கள் நிறைவேறாதென்று கருதுமபடிச் செய்திருத்தலாலும்.

(3) நகர சபையிலும், நகரத்திலும் கட்டி முடிந்த கட்டிடங்களை உண்டுபண்ணினதேச் சையான அதிகாரதாரத பொது ஜன சேவையில் அழுல் செய்வதாலும்,

(4) சில நகரவாசிகளிடமிருந்து கேட்ட என் னதுடனே வரி வசூலிப்பவர்களை வரி வசூல் செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்தியும், வேறுமென்று வரிகொடுக்க வந்தவர்களி டமிருந்து வரி வசூல் செய்ய சட்டவிரோத மாகவும் நியாய விரோதமாகவும் மறுத்த தும் தனக்கு சாதகமாக இருப்பவர்களைப் புதிதாக வரி வசூல் செய்து லோட்டர் ஜாபி தாவில் சேர்த்திருப்பதாலும்,

(5) பொதுவாக முனிசிபல் நிர்வாகத் தை சுமார்காணமாகவும் கல்லழியினும் கட த்த வேண்டிய அவசியமின்மையும், பொதுமையாக சுகாதாரம் அபிவிருத்தியில்லை. ஆனால் நிர் வாக விஷயத்தில் வரி செலுத்துவோரின் பொதுப்பணம் உணராமல் தன் னுடைய சுய லாபத்திற்காகவே நடந்துகொள்வதாலும்.

(6) இயமகாநாடு கவாமென்பதை ஒரு தகு ந்த உத்தியோகஸ்தரை நியமித்து முனிசி பல் நிர்வாகத்திலிருந்து வரும் விஷயங்களை யும், சட்ட விரோதமான நீர்பான்களையும், முனிசிபல் பணவிய தனைப் பற்றியும், உத விக்கணக்கு பரிசோதகர்களால் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தை முக்கிய மாகவும் நிரசனை செய்து ரிப்போர்ட் செய்யும்படியாக ஏகமனதாய் தீர்மானிக்கி றது.

(7) இம்மகாநாடு வாப்போகும் தேர்தல்களில் வரி செலுத்துவோருக்கு ஜவாப்தாரியாகப் போறுப்புடன், கொளஞ்சியில் உழைக்கக் கூடியவர்களையே தேர்ந்தெடுக்க வேணுமாய் தீர்மானிக்கிறது.

(8) வரி செலுத்துவோர், இம் மகா நாட்டில் நிறுத்தி வைக்கும் அபேக்ஷகர்களுக்கே மனப்பூர்வமாய் ஓட்டளித்து வெற்றிபெற வேண்டியவற்றாடு செய்யவேணுமாய் இந்த மகாநாடு தீர்மானித்துக் கேட்டுக் கொள்ளு றது.

(9) வாப்போகும் முனிசிபல் தேர்தல்களில் வாக்காளர்கள் வருப்பு விதியாரமபாரட் டமன் வெகு ஜாகிரதையாக ஆழ்ந்து யோ சனை செய்து அக்கத்தினர்களைத் தேர்ந்தெ டுப்பார்களென நமபுகிறது.

(10) வரப்போகும் தேர்தல்களில் முனிசிபல் சிப்பந்திகள் சோமனுக்காகவும் அவரால் நிறுத்தப்பட்டிருக்கும் அபேக்ஷகர்களுக்காக வும் வாக்கு சேகரிக்கும் வேலைகளுக்காக வாவது எந்த முறையிலும் உழைத்து உதவி செய்யக் கூடாதென்றும், அப்படிச் செய் வதால் அவர்கள் கடைகள்பாதிக்கப் படு கிறதென்றும் தீர்மானிப்பதோடு, கவர்ன் மெண்டார் இது விஷயமாக சோமன் தேர் தல விதிகளுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டுமென்று ஆக்ஞாபிக்க வேணுமென் றும் இம்மகாநாடு ஏகமனதாய் தீர்மானிக் கிறது.

(11) பொது நிதியிலிருந்து, பொதுஜன உப யோகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 'பார்க்' க்கு "ஸ்ரீனிவாச பார்க்" என்று சோமன தமது பெயரிட்டிருப்பதை அழுத்தமாக இம்மகாநாடு கண்டிக்கிறது.

பின்னர் வந்தேமாதரத்துடன் மகாநாடு சுமார் 8-45 மணிக்கு முடிவுற்றது.

(பராபரமே தெய்வம்)

தபசிரேஷ்ட முனிவர்கள் அருள்பெற்றது!
இதுவரை வெளிவராதது!

வைத்திய முறைகளை யூகித்தற்கு
கறிறுணர்ந்தது!!
இனிமேல் காணக்கூடாதது!!

மகா தாம்பர சுன்னம்.

என் கவலைபடுகிறீர்கள்! உங்கள் பயம் தீர்ந்து விட்டது!!
ரணகுஷ்டம் தீர்ந்து விட்டது. சகல ரோகங்களை ஒழிந்துவிட்டது.

எத்தனை காலாக்கு இருந்தக்கஷ்டம், எத்தனை காலாக்கு மூலையிலேயே இருப்பது தெய்வமே! எனும் அபசாரம் வேண்டாம். இன்றே உங்கள் கஷ்டம் தீர்ந்தது. இது ஒரு மஹாஞல் அனுக்கிரகிக்கப் பெற்றது.

குஷ்டம் புண்களில் கட்டியிருக்கும் கட்டுகளை ஒருவாரத்திற்குள் அவிழ்த்தெறிந்து ரணங்களை ஆற்றி புண்களிலுள்ள தோல்களெல்லாம் சுருங்கி விடுகிறது. பற்று, அரிப்பு, தடிப்பு, காற்றம், தேமல், சொரிகளெல்லாம் தானே விட்டு தகடு தகடாக பெயர்ந்து உதிர்ந்து விடுகிறது. சுருக்கிச் சொல்லில் குஷ்டப்புழுக்கள் மடிந்து, குஷ்ட விஷநீர்கள் வேறற்று விடுகிறபடியால், கை கால், மூக்கு, அதைத்து தடித்து, சுளைத்து, வீங்கி, புண்ணாகி, அரித்துத் தின்றவரும் ரணங்களெல்லாம் ஆறி, வெண்குஷ்டம், கருங் குஷ்டம், செங்குஷ்டம், படர்குஷ்டம், குஷ்டமேகங்களெல்லாம் இருந்த இடம் தெரியா மல் மறைந்து, கால் ஆணி, சீழ் வெடிப்பு, மதமதப்பு, விருவிருப்பு, கட்டி, கரடு, திமிர் குஷ்டம், டிஷ்டமேகங்களெல்லாம் நீராமூலமாகி, மயிர் வெட்டு, சூலைமுட்டி, புடையல், விரியன் முதலிய விஷ குஷ்டங்களும் ஈரல், இருமல், தொண்டைக்கட்டு, கீச்சுக்குரல், அதிமூச்சு, ஆள்ரூபத்தை மாற்றி வேற்றுரூபப்படுத்தும் மகா குஷ்ட ரோகங்களெல்லாம் சுலபமாக பறந்துவிடும்.

24 வேளை சுன்னம் விலை ரூபா 25. 12 வேளை சுன்னம் விலை ரூபா 13.

(அனுபானத்துடன்)

குறிப்பு:—அன்னிய நாட்டினர் முழுத்தொகையும் முன்பணமாக அனுப்பவேண்டியது. கடிதம் எழுதுவோர் தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவேணும். கேட்லாக் இலவசம்.

உலகபகுகுகள் ஆசிரியர்—

எம். கந்தசாமி பிள்ளை,

இந்திய பஷாரிஷிகள் வைத்தியசாலை, பழனி S. I.

மின்சார மோதிரம், (எலெக்டிரிக் பவருள்ளது)

இந்த மென்மோதிரத்தை விரலில் போட்டமாத்திரத்தில் அதினின்று மின்சாரம் வெளி பாகி அதுவரல் மூலியமாய் தேகமெங்கும்பரவி காச்சல், வாந்திபேதி, இன்புளுயன்சா

காடி நரம்பு களர்ச்சி, தலைவலி, மூலம், அன்னத்துவேஷம் அஜீர்ணம் மலச்சிக்கு, வாதம், சூல் முதலிய கொத்துவியாதிகளைக் குணப்படுத்தி தேகத்திலிருக்கும் கிருமிகளையெல்லாம் கொன்று தேகத்தையும் பலப்படுத்துகின்றது. இது அநேக லோகங்களால் செய்யப்பட்டு பார்வைக்கு வெகு நேர்த்தியாகவும், அலங்காரமாகவுமிருக்கும். சிறியோர், பெரியோர் யாவரும் இந்த மோதிரத்தை உபயோகப்படுத்தலாம்.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0. 12-க்கு விலை ரூ. 15—0—0.

ஜானி அன்கோ.

நெ. 10 தென்னூர், திருச்சிராப்பள்ளி (2)

சுவாமிகளும் தேவடியாள்களும்.

(சித்திர புத்திரன் எழுதுவது)

நமது நாட்டில் உள்ள எல்லா கெட்ட காரியங்களுக்கும் "நமது நாட்டு கடவுள்" களே வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். அதாவது சூது வாது, வஞ்சகம், பொய், புரட்டு, திருட்டு, விபசாரம், குடி, கூத்தி, கொலை, ஜீவஇம்சை முதலிய எந்த கெட்ட தொழிலை எடுத்துக்கொண்டாலும் சில கடவுள்களிடத்தில் இவையாவும் மொத்த மாகவும், சில சில கடவுள்களிடத்தில் தனித் தனியாகவும், சில்லரையாகவும் சம்பந்தப் பட்டிருப்பதைப் பார்த்து வருகிறோம். இந்த குணங்கள் நமது கடவுள்களுக்கு இருப்பதாக காமே தினப்படியும், மாதப் படியும், வருஷப்படியும், காலக்ஷேப மூலமா கவும், கடிப்பு மூலமாகவும், பூஜை மூலமா கவும், பஜனை மூலமாகவும் திருவிழாக்கள் மூலமாகவும் நடத்திக் காட்டிக் கொண்டும் வருகிறோம். இவைகளுக்காகவே நமது பெரியவர்களும் ஏராளமான சொத்துக்க ளையும் விட்டு இவைகள் தவறாமல் நடந்து வர செய்திருக்கிறார்கள். தற்கால தர்ம பரிபாலனம் என்பதும் பெரும்பாலும் இக் காரியங்களைப் பரிபாலனம் பண்ணுகிறவை களாகவே இருந்தின்றன.

இந்த நிலையில் எற்படுத்திய கடவுளவணங்குகும் மக்களுக்கு ஒழுக்கம் எப்படி உண்டாகக்கூடும்? இம்மாதிரியான தர்மங்களை பரிபாலனம் செய்யும் மக்கள் எப்படி ஒழுக்கமாக இருக்க முடியும்? கடவுள்களும், கடவுள்களைப்பற்றிய கதைகளும், புராணங்களும் மற்றும் அது சமயந்தமான கட்டுக்கதைகளும் மக்களுக்கு அறிவையும் ஒழுக்கத்தையும் உண்டாக்குவதற்கு உண்டாக்கப்பட்டனவேயன்றி இம்மாதிரி பலன்களுக்கு உண்டாக்கப்பட்டதாக யாரும் ஒப்புக்கொள்ள முடியாது.

மேற்கண்ட அனேக விதமான ஒழுக்கக் குறைவுகள் கடவுள் பேயரால் கடப்பவைகளுள் இதுசமயம் சுவாமியின் பெயரால் பெண்களுக்கு விபசாரிதனத்திற்கு அனுமதிச்சிட்டு (பொட்டுகட்டுதல்) என்னும் லைசென்ஸ் கொடுக்கப்படுவதைப் பற்றி மாத்திரம் இவ்வியாசத்தில் எடுத்துக் கொள்ளுவோம். கோயில்களுக்கு தாசிகள் என்னும் விலைமாதர்கள் எதற்காக வேண்டும்? மேளமடித்தல், மணிபடித்தல் முதலியகாரியங்கள் எதற்காக பூஜைக்கு உபயோகப் படுகிறது என்றுயாராவது கேட்டால், சுவாமிக்கு திவாராதனை ஆகும் போது வேறு சப்தங்கள் காதில் விழாமல் இருக்கும் பொருட்டு மணிச்சப்தங்களும், மேளவாத்தியங்களும் செய்யப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியோ தப்போ அதைப்பற்றி நாம் இப்போது விவகரிக்கவரவில்லை. வேறு சப்தங்கள் காதில் படாமல் இருப்பதற்கு மணியும், மேளமும் வைத்திருப்பதாலும், விலை மாதர்களான விபசார ஸ்திரீகளைகோவிலில் நிறுத்தி இருப்பதன் காரணம் என்ன? என்று இந்த முறையில் போகிப்போமானால் சுவாமி திவாராதனையின்போது பக்தர்களுக்கு வேறு சாமான் கண்களில் படாமல் இருப்பதற்கு இந்த சாமான்களை (விபசாரிகளை) நிறுத்தி வைத்திருப்பதாகதான் கொள்ள வேண்டும். இதையாராவது அறிவாளிகளின் லீலையென்று சொல்லக்கூடுமா?

நமது நாட்டில் விபசாரத்திற்காக பொட்டுக்கட்டிக்கொள்ளும் தாசிகள் எல்லோரும் ஒவ்வொரு சுவாமியின் பெயரால் தான் தங்களைப் பொதுமக்கள் என்று முடிவு கட்டி ஸ்தாபரப்படுத்திக் கொள்ளுகிறார்களேயல்லாமல், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி இல்லாததால் இந்த வியாபாரத்திற்கு போகிறேன் என்று யாரும் சொல்வதே இல்லை. இந்த மாதிரி அனுமதிச் சீட்டு கொடுக்கும் கடவுள்வேறு எந்த மதத்திலாவது இருக்கிறதா வென்பதை யோசித்துப் பார்த்தால் நமது அறியாமையும் நமது கடவுள்களுக்கு நாம் செய்யும் இழிவும் புலப்படாமல் போகாது.

தவிர, வேறுவிவகார முறையில் பேசுவதானாலும், அதாவது கடவுளுக்கு பணி செய்ய இவர்கள் கோயிலில் நியமிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதானாலும், இருந்திருந்து கடவுளுக்கு பணி செய்ய இந்த விபசாரத்தில் ஈடுபடுபட்டவர்களைத்தானே நியமிக்கவேண்டும்? வேறு யோக்கியமான தொழிலில் உள்ள பெண்மக்கள் உங்கள் சமூகத்தில் இல்லையா என்று யாராவது கேட்டால் அதற்கு இவர்கள் என்னபதில் சொல்லக்கூடும்? இம்மாதிரி ஒவ்வொரு முக்கிய கோயிலிலும் பூஜை காலத்தில் 10, 20, 30, சில கோயில்களில் 100, 150 வீதம் விபசாரப் பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டு கோயிலுக்கு தரிசனத்திற்காக வரும் பக்தர்கள் முன்னிலையில் நடமாடினால் அந்த பக்தர்களின் கதி என்ன ஆவது? கிராமாந்தரங்களில் எந்த கோயிலில் பார்த்தாலும் உள்ளுக்குள் நன்றாய் கொஞ்சம் அழகாய் இருக்கிற தாசிகள், முதலாவது தர்மகர்த்தாவுக்கு, அல்லது அவர்கள் மக்களுக்கு, அதற்கடுத்தது தான கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு என்பதாகவே வழக்கமாயிருக்கிறது.

கிராமாந்தரங்களில் உள்ள கோயில்களின்கதி இப்படியென்றால், சில பெரிய பட்டணங்களிலும், முக்கிய ஸ்தலங்களிலும் உள்ள கோயில்களின் சங்கதி கேட்கவேண்டியதில்லை. விசேஷ ஸ்தலங்களில் உள்ள கோயில்களின் தாசிக்கு பெரும் பான்மை யும் அந்தந்த கோயில அர்ச்சகர்கள் முதலியவாகளே தாசர்களாகி விடுகிறார்கள். சுவாமி பக்திக்காக கோயில்களுக்குப் போகும் பக்தர்கள் நாளா வட்டமாய் பழகி தாசி பக்தர்களாகி விடுவதை நாம் எத்தனையோ பார்த்திருக்கிறோம். இந்த அநாகரீகமும் கெடுதியுமான காரியங்கள் மதத்தின் பெயராலும் சுவாமியின் பெயராலும் நடை பெறுவதானது நம்து சமூகத்திற்கே இழிவு என்று சொல்லாமலிருக்கமுடியவில்லை. "சாஸ்திரங்களிலிருக்கிறது, அதற்குநாம் என்ன செய்வது" என்று சிலர் சொல்லலாம். "வெகுகாலமாய் வழக்கத்தில் வந்து விட்டது அதற்கு நாம் என்ன செய்வது" என்று சிலர் சொல்லலாம். இதெல்லாம் முட்டாள்தனமான சமாதான மாகுமே தவிர அறிவுள்ள சமாதானமாகாது. நம்முடைய சாஸ்திரத்தில் இல்லாத அயோக்கியத்தனம் உலகத்தில் ஒன்றுகூட இல்லை என்பதாக நம்மால் மெய்ப்பிக்கலாம். அதையெல்லாம் இன்றைய தினம் நாம் செய்வதென்றால் நம்மைப்போல மூடர்கள் உலகத்திலிருக்கவே முடியாது. அந்த சாஸ்திரங்கள் எனபவைகளை எழுதினவர்கள் யார்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்மந்தம்? எதற்காக இப்படி யெல்லாம் எழுதினார்கள்? இம்மாதிரி வேறுதேசத்தில் வேறுமதத்தில், வேறு சாஸ்திரத்தில் எங்கேயாவது இருக்கிறதா? என்பவைகளை யோசித்துப் பார்த்த பிறகு இவற்றை கவனிக்க வேண்டுமே யல்லாமல், எவனோ தனக்கு தொழில்வேண்டும், வயிற்றுப் பிழைப்பு நடக்கவேண்டும் என்பதற்காக வகாவது ஒன்றை எழுதிவைத்து நமக்கு காட்டிலும் அதுவே நமக்கு கடவுள் வாக்காகி விடுமா அல்லது ஆகாரமாகி விடுமா? மனிதனுக்கு பகுத்தறிவு எதற்காக இருக்கிறது? இப்பொழுது வரவர அனேக கோயில்களில் இந்த தாசி வழக்கத்தை எடுத்தாகி விட்டது. உதாரணமாக மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஆட்சிக்குள்பட்ட கோயில்களுக்கு எந்தும்தாசி உத்தியோகம் இருக்ககூடாது என்பதாக ஒரு உத்திரவுபோட்டு தங்கள் சாமிகளை விபசாரத் தனத்திலிருந்து மீட்டு விட்டார்கள். அதன் மூலம் அந்த சமஸ்தானத்து கோயில தாசிகள் எல்லாம் நீக்கப்பட்டாய்விட்டது. மைசூர் சமஸ்தானத்து சுவாமிகளுக்கு வெட்கம் வந்து தங்களுக்கு இனிமேல் தாசிகள் வேண்டியதில்லை என்று அந்த கவர்ன்மெண்டுக்கு சொல்லி விட்டது போல நமது நாட்டு சுவாமிகளுக்கும் என்றைக்காவது வெட்கம் வந்தோ அல்லது கிழப் பருவம் வந்தோ இனிமேல் தங்களுக்கு தாசிகள் வேண்டியதில்லை என்று தேவஸ்தான போர்டாரிடமாவது, கமிட்டியாரிடமாவது, தர்மகர்த்தாக்களிடமாவது சொல்லிவிடக் கூடாதா என்பதாக நமது நாட்டு சாமிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்

நமக்கும் கடவுளுக்கும் மத்தியில் தரவர்கள் வேண்டாம்.

மூந்துங்கள்!
ரூபாய் ஒன்றே
ஏமாந்து விடாதீர்கள்

மூந்துங்கள்!!
ரூபாய் ஒன்றே
ஏமாந்து விடாதீர்கள்

உலகப் பிரசித்திபெற்ற

5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்.

கேளிலிருந்து படிப்பதுபோல் தபால் மூலம் தொழிலுக்கு யாதொரு இடையூறன்றி, தமிழ் தெரிந்த எவரும் படித்து தேர்ச்சியடையலாம். ஷே கோர்ஸை கேரில் வந்து படிப்பவர்கள் மாத மொன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப் படித்திருக்கிறார்கள். கேரில்வந்து படிப்பதற்கு 50 மாணவர்களுக்கு மேல் எடுக்க இடமில்லை. ஆகையால் செப்டெம்பர் 15-உக்குள் அப்படி படிக்க விரும்புவோர் ரூ. 5 அனுப்பி பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஐந்து வருஷ கல்வி ஒரே வருஷம்

கே. எஸ். மைக்காபர் :—நான் மூன்றும் வகுப்புப் படிப்போடு ஷே 5-ம் கோர்ஸில் 1923.ம் வருஷம் சேர்ந்து மாதமொன்றக்கு ரூ. 5 வீதம் கொடுத்துப்படித்தேன். இங்கிலீஷ் அட்சரத்திலிருந்து ஆரம்பித்து, வார்த்தைகள், வாக்கியங்களமைத்தகேள்விகள், விடைகள், சம்பாஷணை, கந்தி எழுதுதல், கடிதம் எழுதுதல் முதலியவை கற்றுக்கொடுக்கப்பட்டதில் சுமார் 50 மாணவர்கள் வரை பூர்த்தி செய்தார்கள். 5 மாதம் கோர்ஸ் முடிந்தவுடன் ஜூனியர் கோர்ஸில் சுமார் 9 மாதங்கள் வாசித்தேன். சற்சமயம் என் அறிவு சுமார் 5 வருஷப் படிப்பிற்கு மேலாக இருக்கிறதென்பது உண்மை. தபால் மூலம் அதே கோர்ஸை மாதம் ஒன்றுக்கு ரூபா 1 வீதம் கற்றுக்கொடுப்பது நம் தமிழ் நாட்டு ஏழை மக்களின் பொருட்டன்றி வேறல்ல.

ஆங்கில பாஷையின் அவஸ்திவாரம்.

எஸ். பக்கிரிசாமி பிள்ளை :—நான் 5.வது வருப்பு வரை சுமாகவே படித்து தேக புஸ்தகங்களை வாங்கி வாசித்ததில் பிரயோஜனப்படாமல் ஷே கோர்ஸில் சேர்ந்து வாசிக்கிறேன். 1 வாரத்தில் முதல் கோர்ஸை முடித்துவிட்டு இரண்டாம் கோர்ஸ் படிக்கிறேன். பாடங்களில் ஆங்காங்கே கடின பதங்களுக்கு அர்த்தம், உச்சரிப்பு, குறிப்புகள், அப்பியாசங்கள், முதலியவை காணப்படுவதனால் உபாத்தியாயரின்றிப் படித்துக்கொள்ளலாம். சகேகங்கள், விடைகள் முதலியன சரியான பிரகாரம் திருத்தப்பட்டிருக்கின்றன. 4, 5, 6, 7 வகுப்பு மாணவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இது நல்ல அஸ்திவாரக் கோர்ஸ் என்றே சொல்லலாம். உடனே சேர்ந்து தன்மையடைவீர்களாக.

உடனே எழுதுங்கள்.

பிரின்சிபால், கேம்பிரிஜ் இன்ஸ்டிடியூட்,

நாகூர்.

ஐயா, இன்று ரூபாய் 1 மணியார்டர் செய்திருக்கிறேன். என் பெயரை பதிவு செய்துகொண்டு உடனே முதல் கோர்ஸ் பாடங்களையும், பிராஸ்-பெக்டஸ் பாரங்கள் முதலியவைகளையும் அனுப்பி வையுங்கள். பாடம் முடிந்தவுடன் பணமனுப்பி ஒவ்வொரு கோர்ஸையும் பெற்றுக்கொள்வதோடு விடைகளை ஒழுங்காய் அனுப்பிவைக்கிறேன்.

பெயர்..... தெளிவான விலாசம்.....

3-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

‘ஆனந்தபோதினி’.

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது.
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பிஜிக்கு, சிங்கபூர், கெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இலவம்.
விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
கெ. 6, வெங்கடேச மேன்தரி தெரு, மதராஸ்

சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

எல்லா புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். பிஜிக்கு, மலேக்கா முதலிய தேசங்களில் உள்ளவர்கள் ரூ. 1—8—0 முன்பணம் அனுப்பி புஸ்தகம் பெற்றுக்கொள்ளவும்.

மாணிக்க விலாசம் பிரஸ்.

அருணாசல முதலி வீதி, மதராஸ்

ஆருடம்:—சர்வ ஞானமான கேள்விகள் 6-க்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P. O. (S. I.)

“அறிவு விளக்கம்”

ஓர் மாதக்கரப் பத்திரிகை

வருடசந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இலவம்

“அறிவு விளக்கம்” ஆபீஸ்

உடுமலைப்பேட்டை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிராயத்தைத் தெரிவித்து விட்டுதான் பேச வேண்டுமென்றும், அப்படித் தெரிவிக்க எனக்கு உரிமையுண்டென்றும், அவ்வுரிமையை அக்ரிசனரிடம் முன்பே பெற்றிருக்கிறேன் என்றும் உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் ஒவ்வொருவராய் எழுந்து போய்விடலாமென்றும் கடைசியாக நிற்கும் இந்த காஸ்ட்லட் கம்பத்தினிடமாவது என் வயதைத் தெரிவித்துத்தான் பேசவேன்” என்றும் பிடிவாதமாய் நாற்காலி மீதே நின்று பேசிமுடித்தார்.

அந்தப் பேட்டை வாசிகள் அனைவரும் ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளைதான் பேச வேண்டுமென்றும் ஜே போட்டார்கள். மைலாப்பூர் கோஷ்டியைச் சேர்ந்த சில பிராமணர்களும் ஸ்ரீமான் பிள்ளையை யாரென அறியாத சில வெளியூர்த் தொண்டர்களும், காங்ரஸ் கங்காணிகள் சிலரும், பார்ப்பனப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளுமதான் கூச்சலுபோட்டதில் முக்கியமானவர்கள். இவர்கள் யாவரும் ஸ்ரீமான் பிள்ளையின் உறுதிக்கும், ஜனங்களின் ஆதரவுக்கும் முன்னே எதிர்நிற்கமுடியாமல் வெட்கித் தலைகுனிந்து அமைதியாய் உட்கார்ந்து ஸ்ரீமான் தண்டபாணியின் அரிய உபதேசத்தைக் கேட்டு விட்டுஉண்மையுணர்ந்து கூட்டம்கலைந்தபின் வீடுபோய்ச் சேர்ந்தனர். (திராவிடன்.)

மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு விதமின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை அதுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத போக்கிஷம். மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குஓர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்குத் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்தி பெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கண்ணுக்கும் மின்சார ரசம் உதவும்

கில் குணமடையலாம்.

குழந்தைகள முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்தும் இல்லை.

உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்கள் ஆச்சரிய முறச்செய்யும். கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.

பழநி சி. எம். சாமி.

குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், சூன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளை பஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 5 : 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபான மும்விலை ரூ. 25 எழைகளுக்குப்பாதிவிலை

இளமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்ற போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மோகியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானேன் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானேன் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-கிர் மார்க்கட் ரோடு, சூலை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரண்மனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை

பிராமணீய மொழித்த கமகிரிமை.

குருவிகுளம் திருவாளர் க. யி. ம. மாரியப்ப பிள்ளை திருஹத்தில் டியார் தகப்பனார் திரு. மதார வீரபிள்ளை காலஞ் சென்ற பதினாறவது நாள் கர்மகிரியை பார்ப்பனக் குருக்களன்னியில் தன் குலக்குருக்களைக் கொண்டு நடத்தினர் என்று கு. அ. க. கிருஷ்ண பிள்ளை எழுகிறார்.

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாததிரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப் பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையை வருட சந்தா செலுத்தி ஜனங்களின் உபயோகத்தைக் முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது வி. பி. மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகைகளை வி. பி. யில் அனுப்புவதில்லை.

ஆகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலுள்ள கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலிய வைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய ஒத்துழைப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கர சங்கம், ஈரோடு.

மதராஸ் கவர்மெண்ட்டு சட்ட நிருபண (லெஜிஸ்லேட்டிவ்) சபை அறிக்கை.

மதராஸ் சட்டசபைக்கும் இந்திய சட்ட சபைக்கும் தபால் மூலமாக அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதை ரத்துசெய்யும் விஷயம் சர்க்காரின் ஆலோசனையிலிருக்கிறது. சென்ற தபால் மூலமாக நடந்த தேர்தல்களினால் கலெக்டர்கள் அடைந்த அனுபவத்தைக் கொண்டு அவர்கள் சொல்லும் குறைகளையும் பரிசிலினை செய்துபார்த்தார்கள். அவர்களில் பலர், தபால்மூலம் தேர்ந்தெடுக்கும் ஏற்பாட்டையே ஒழித்துவிட வேண்டுமென்றும், அது துஷ்பிரயோஜனப் படுத்தப்படுகிறதென்றும், அதனால் அபேட்சகர்களுக்கும் தேர்தல் நடத்துவோர்களுக்கும் இழுக்குண்டாகிறதென்றும் அபிப்பராயப்படுகிறார்கள். இது விஷயமாய் மஹாஜனங்களின் அபிப்பராயம் தெரிந்தபிறகு சர்க்கார் யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. 1927-வது அக்டோபர் மாதம் 1—உ வரை கிடைக்கும் அபிப்பராயங்களை சர்க்கார் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வார்கள்.

சென்ட் ஜார்ஜ் கோட்டை மதராஸ், 23-8-27.

P. சீதாராமையர், சர்க்கார் காரியதரிசி

$ 500 இனம்! $ 500 இனம்!!

சதாநந்த யோகிவ்வரருடைய

மகா வீரியவிருத்தி லேகியத்தை

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ஐங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வேதுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிகூதித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி வீரியமுள்ள பொருள்களாகிய அப்ரேக், அம்பர் சல்காரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான தொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைக்களையுங்கொண்டுசெய்யப்பட்டது

இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களோ டடக்கியதாகயிருந்தும், இதை தன வந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு ஜீதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இந்த ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூத்தியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனானி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக எராளமான நற் சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாத்திரிக்கா பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M சோட்டாசிவ் L M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோன் டிவிஷனல் எஞ்சினீர் G. P O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரின் பிரதம சிஷ்யரும்.
வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்தர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான இ. வீராசாமி நாயுடு அவர்கள், ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
ரூ. ராஸால் பண்டிதன் ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை,

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75

பிரான்ஞ் ஆபீஸ்:— 17, தைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சுராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லாதுமருந்து அனுப்பப்பட மாட்டாது

உறையூர் அங்கவஸ்த்திரங்கள்.

அரல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "உறை" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் எழைஈறை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

23/4 அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—12—0
டை சரிகை சீர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். தமிழ் நூலுக்கு சகாயமாக ஏடர் படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விஸ்வாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா ஜவுளி வர்த்தகசாலை
உறையூர் போஸ்டு திருச்சி

பெட்ரோமாக்ஸ் லேட்.

லேட்கள், மாண்டில், டேம், தனித் தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். மொட்லாக் இனம் ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த, ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர்குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனம்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனம் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந் நிலையம், திருச்சங்கோடு.

சுப்பிரமண்யர் கவசசத்து.

சகலகாரியங்களும் அனுகூலம். சகலவியங்களும் ஏற்படும். விசுவாசம். கியாதியை கொடுக்கும் பயங்கரங்கள் நீங்கும் தரித்திரம் முதலியது அணுகாது.

சத்து 1-க்கு விலை ரூ. 2 தபால் செலவு வேறு.

இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய கார்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமண்ய உபாசி
பழனி. Palni P. O. (S. I.)

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½" x 2½" ஆகும். இந்த மெஷீனை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி, பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீ சோமசுந்தரவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.